
# மகாஜனன்
# Mahajanan




ஆண்டு மலர்
மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை, இலங்கை
பழைய மாணவர் சங்கம் ~ ஐக்கிய இராச்சியம்

*Annual Magazine*
*Mahajana College, Tellippalai, Sri Lanaka*
*Old Students Association - United Kingdom*

**2006**

www.mahajana.co.uk
info@mahajana.co.uk

கல்லூரி தாபகர் கல்விக்கலைஞன்
திரு தெ து துரையப்பாபிள்ளை



தீரமுற்று திருவடைந்த
தெய்வதுரை யப்பரது
தீர்கமான தியானத்தில்
தேறிவந்த மகாஜனா.

புலவர் நா சிவபாதசுந்தரம்.

# மகாஜனன்
# ஐக்கிய இராச்சிய கிளை
# ஆண்டு மலர் 2006

மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
Mahajana College, Tellippalai
Old Students Association - United Kingdom
பழைய மாணவர் சங்கம் - ஐக்கிய இராச்சியம்
*Proud to be a Mahajanan*

**ஆண்டு மலர்க் குழு**
- சி.கணேசலிங்கம்
- இ.சம்பந்தன்
- அ.விமலதாசன
- அ.இரவி

**கணனி எழுத்தமைப்பு**
- ஆண்டு மலர்க் குழு
- க.ஜெகதீஸ்வரன்
- வை.சுப்பிரமணிய குருக்கள்

**மலர் வடிவமைப்பு**
- ஆண்டு மலர்க் குழு

**அட்டை வடிவமைப்பு**
- ஆண்டு மலர்க் குழு

**விளம்பர உதவி**
- சி.கணேசலிங்கம்
- ந.குகநேசன்
- வீ.பாலசுப்பிரமணியம்
- வீ.தவமுருகானந்தன்
- க.நாகேஸ்வரன்
- S.சிறிகாந்தலிங்கம்

**அச்சு பதிப்பு**
- *R.S Printers*

## நுழைவாயில்

எமது சங்கத்தின் பத்தொன்பதாம் ஆண்டு நிறைவையொட்டி புதிய நிர்வாக குழுவினரால் இம்மலரை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். பழைய மாணவர்கள் உணர்வாலும், உறவாலும் ஒன்றிணைவதற்காக இச்சங்கம் உருவாக்கப்பட்டது. இதில் உங்கள் அங்கத்துவம் தனிப்பட்டதும், பெருமைக்குரியதும்.

'இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள்'

வெளிநாடுகளில் ஓரளவிற்கேனும் வசதியாக வாழ்ந்துவரும் நாம், இன்றைய மாணவ சமுதாயத்திற்கு சரியான வழிகாட்டியாகவும். நாளைய உலகம் சரியான முறையில் உருவாக எம்மாலான பங்கினை ஆற்றவேண்டியது எமது கடமை.

நொந்து போன மாணவர்களுக்கு தாரள உதவி வழங்கவும், முயற்சியுடைய மாணவர்களுக்கு மேலும் உற்சாகப்படுத்தவும், புலம்பெயர்ந்து வாழும் இளம் மகாஜனன்களை மகாஜனவுடன் ஒர் பிணைப்பை ஏற்படுத்தவும் முடிந்தவரை பாடுபடுவோமாக.

இம்மலரின் உள்ளடக்கம் முழுவதும் மகாஜனன்களின் படைப்புகளே. இதை உங்கள் முன் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

~ஆசிரியர் குழு

**கல்லூரிக் கீதம்**
(ஜன கண மன என்ற மெட்டு)

ஜயஜய மாஜன ஜயசுப மாதா
ஜயஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
துரையப் பாபுகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத் தினம்பணி நினைவோம்

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை யுடையோம்
உனைநீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா

**கொடி வணக்கம்**

பல்லவி

கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா
கோலமுற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா
(கொடி)

அநுபல்லவி

தீரமுற்றுத் திருவடைந்த
தெய்வதுரை யப்பரது
தீர்க்கமான தியானமதில்
தேறிவந்த மாஜனாவின்
(கொடி)

சரணம்

மலர்மலிந்து மறையுரைத்து
மறுவிலாத சுடர்விரித்து
தவம்பொலிந்த மாசனாவைத்
தாங்குகொடியின் தாள்பணிவோம்
(கொடி)

தனமளித்து தவம்மிகுந்து
தாவியாடுங் கொடியிது
மனமகிழ்ந்து மலர்கள் தூவி
வாழியென்று வணங்குவோம்
(கொடி)

*~~~~ புலவர் நா.சிவபாதசுந்தரம்*

## *United Kingdom National Anthem*

*God save our gracious Queen,*
*Long live our noble Queen,*
*God save the Queen!*
*Send her victorious,*
*Happy and Glorious,*
*Long to reign over us;*
*God save the Queen!*

*O Lord our God arise,*
*Scatter her enemies*
*And make them fall;*
*Confound their politics,*
*Frustrate their knavish tricks,*
*On Thee our hopes we fix,*
*God, save us all!*

*Thy choicest gifts in store*
*On her be pleased to pour;*
*Long may she reign;*
*May she defend our laws,*
*And ever give us cause*
*To sing with heart and voice,*
*God save the Queen!*

# புதிய நூற்றாண்டும் புதிய சிந்தனையும்

ஈழத்து தமிழ்ப் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் உலகின் பல பாகங்களிலும் சங்கங்கள் அமைத்து திறம்பட செயலாற்றி வருகின்றாகள். இந்த வகையில் முதல் முதலாக ஐக்கிய இராச்சியத்தில் ஆரம்பிக்கப்பட்ட சங்கங்களில் ஒன்றான மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் 1987ல் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்ப காலங்களில் பாடசாலைக்கு நிதி சேகரித்தல், பரிசில்கள், உபகரணங்கள் பெற உதவுதல், ஆலயத்திருவிழாக்கள் நடாத்துதல் மற்றும் ஒன்றுகூடல் போன்றவற்றுடன் அதன் பணி நின்றது. தொடர்ந்த வந்த காலங்களில் பழைய மாணவர்களின் பிள்ளைகள் பங்குபற்றும் தமிழர் விளையாட்டுப் போட்டிகள், "யுத் நைற்" போன்ற நிகழ்சிகளும் நடைபெற்றன. இது ஒரு மிகவும் முக்கியமான வளர்ச்சி. எமது சந்ததியினரரோடு வெளிநாடுகளில் இயங்கும் பழைய மாணவர் சங்கங்கள் செயலற்று போய்விடும் என்பது ஒரு தவிர்கமுடியாத உண்மை. புலம்பெயர்ந்து வாழும் சந்ததியினர்களை, எங்கள் கல்விக்கூடங்களுடன் ஓர் அன்புப் பிணைப்பை ஏற்படுத்துவதுடன் மூலம் எங்களை வாழவைத்த பாடசாலைக்கான தொடர்ச்சியான உதவிகளை உறுதிபடுத்துவது தவிர்கமுடியாத எமது கடமைகளில் ஒன்றாகும்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் உதயமான சைவமறுமலர்ச்சியின் விளைவாக பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களால் மகாஜனக் கல்லூரியை 1910ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய காலத்தின் தேவை கருதி, ஏழை விவசாயிகளின் பிள்ளைகளும் கல்வி பெறவேண்டும் என்ற உயரிய நோக்கோடு மகாஜனக கல்லூரியை அம்பனைக் கிராமத்தில் அவர் ஆரம்பித்தார். எத்தனையோ எதிர்ப்புக்களின் மத்தியிலும் அவரது விடாமுயற்சியும் தியாக சிந்தையுமே இன்று பெருவிருச்சமாக வளர்ந்து பல பழைய மாணவர்கள் சங்கங்களுடன் உலகின் பல பாகங்களிலும் பரவி பெருகியுள்ளது.

தொடர்ச்சியான யுத்தத்தினாலும், தொடரும் இடப்பெயர்வுகளினாலும் எமது பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் மற்றும் தொன்றுதொட்டு பரம்பரையாக வாய்வழி முறையாக வந்த கலைகலாச்சார, தொழில்நுட்ப மற்றும் துறைசார் அறிவுத்தொடர்ச்சி அறுந்து போய்விட்டது. புதிய சமுதாயம் இந்த அறுந்து போன அறிவுச் சூனியத்தில் திசைதெரியாமல், வழிகாட்டடியில்லாமல் எதிர்காலத்தில் அலைவதை நாம் எதிர்வுகூறலாம்.

புலமைமிகு மகாஜன மாணவ சமுதாயத்தை மீண்டும் உருவாக்குவதில் எமக்கு பாரிய கடமைப்பாடு உண்டு. புலம்பெயர்ந்த நாடுகளில் நாம் நடாத்தும் கல்விகூடங்களின் எண்னணிக்கையில் எமக்குள்ள கலைகலாச்சார ஈடுபாடு கண்கூடு. இங்கு வாழும் எமக்கு வாய்ப்புகளும் வசதிகளும் நிறையவே உள்ளது. அன்றாட வாழ்வில் தொழில்நுட்பத்தின் ஆதிக்கம் எமக்கு நன்கு புரியும். இந்த வாய்ப்புவசதிகளிலும் தொழில்நுட்பத்திலும் மகாஜன சமுதாயதத்திற்கும் பங்களிப்பது எமது கடமை.

இன்றைய காலத்தின் தேவை கருதி, எமது மாணவ சமுதாயம் துறைசார் தொழில்நுட்ப கல்வி பெறவேண்டும் என்ற உயரிய நோக்கோடு "மகாஜனக் தொழில்நுட்ப கல்லூரி – *Mahajana Technical Institute (MIT)*" என்ற கல்லூரியை ஆரம்பிக்கவேண்டும். இந்த ஆரம்பிப்பிற்கு சிறிதளவேனும் பங்களிப்பது எமது கடமை என்ற புதிய சிந்தனையுடன் புதிய நூற்றாண்டில் காலடியெடுத்து வைப்போமாக.

அ.விமலதாசன்
தலைவர்
2006~2008

## செயலாளரிடமிருந்து...

எங்கள் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 18 ஆண்டுகள் நிறைவு பெற்று 19 வது ஆண்டை புதிய நிர்வாக சபை உறுப்பினர்களுடன் ஆரம்பித்துள்ளது தற்போதைய நடைமுறை நிர்வாக செயல்பாடுகள் பற்றிய செய்திகளை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது சங்கத்தால் வருடாவருடம் நடாத்தப்படும் கோயில் பூசை இவ்வருடம் இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலயத்தில் 15.04.2006 இல் நடைபெற்றது இப் பூசையை திரு ந குகநேசன் திரு இ இராமநாதன் ஆகியோர் பொறுப்பேற்று ஏனைய அங்கத்தவர்களின் உதவியுடன் சிறப்பாக நடாத்தினோம் இத் தமிழ் புத்தாண்டு தினத்தில் மகாஜன கலண்டரை வெளியிட்டோம்.

எமது சங்க உதைபந்தாட்ட குழு ஐக்கிய இராச்சியத்தில் நடைபெறும் தமிழர் விளையாட்டு விழாக்களில் பங்கு பற்றி பல வெற்றி கிண்ணங்களை பெற்றுள்ளது இக் குழக்களுக்குப் பயிற்சிகளை அளிக்கும் திரு பா புவனேந்திரா, திரு முகுந்தன் விளையாட்டுத் துறை செயலாளர் வி சிவதாஸ் ஆகியோரை பாராட்டுகின்றோம்.

வருடாவருடம் மகாஜன சமூகத்தை ஒன்று சேர்க்கும் மகாஜன நாள் ஒன்று கூடல் இவ்வருடம் *Lanfranc school, Croydon* இல் 19.08.06 இல் நடைபெற்றது இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக *Dr* திரு திருமதி கருணகரனும் சிறப்பு விருந்தினராக திருமதி சர்மா அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அத்துடன் மகாஜன பழைய மாணவ உதைபந்தாட்ட பிரிவுக்கு கடந்த 10 வருடங்களுக்கு மேல் சகல விதத்திலும் உதவி புரிந்த மகாஜன பழைய மாணவர்கள் அல்லாதவர்கள் நால்வர் கௌரவிக்கப்பட்டனர் இவ் விழாவிற்கு உதவி புரிந்த அனைவருக்கும் எங்களது நன்றிகள்.

எமது சங்கத்தின் காலச்சார நிகழ்ச்சி மகாஜன மாலை இவ்வருடம் 07.10.2006 அன்று *Secombe Theatre* இல் நடைபெறவுள்ளது இவ் நிகழ்ச்சிக்கு பெறுப்பாளர்களாக திரு சி கணேசலிங்கம் திரு ப வை ஜெயபாலன் ஆகியோர்களும் இவ்விழாவில் வெளியிடப்படும் மலருக்கு பெறுப்பாளராக ஆண்டு மலர்க் குழுவும் செயல்படுகின்றனர் இவ் விழாவில் பங்கு பற்றும் எல்லா கலைஞர்களையும் பாரட்டுவதுடன் இவ் விழாவிற்கு *sponsors* செய்த அனைவருக்கும் விளம்பரங்கள் தந்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

எமது சங்கத்தின் இளைய சமூகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் மகாஜன இரவு விழா 17.12.2006 இல் நடைபெறவுள்ளது. இவ்விழாவின் ஒழுங்குகளை செல்வி அபிராமி விமலதாசன் கவனிக்கின்றார்.

ஐக்கிய இராச்சிய வாழ் அனைத்து மகாஜன கல்லூரி பழைய மாணவர்களும் இச் சங்கத்தில் இணைந்து உங்களால் முடிந்த செயல்பாடுகளை செய்ய முன்வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


நன்றி

இ தி சம்பந்தன்.
செயலாளர்
2006~2008

# செயற்குழு
## 2006 ~ 2008



சி.கணேசலிங்கம், வீ.பாலசுப்பிரமணியம், திருமதி தேவா நாதன், அ.விமலதாசன், இ.சம்பந்தன்
நிற்பவர்கள் ~ க.பாலகுலேந்திரன், பா.வை ஜெயபாலன், வ. சிவானந்தராஜா, வீ தவமுருகானந்தன், அ.இரவி, ந குகநேசன், த.குமரன், வ.ரவீந்திரன்.



செல்வி அ செல்வராஜா, வி சிவதாஸ், எஸ் சிவக்குமார், நா சிறீசபேசன், நா சிறீகெங்காதரன், திருமதி பாலசுப்பிரமணியம், திருமதி பாமா மகேஸ்வரன், வ.இராமநாதன்.

<u>சமூகமளிக்காமுடியாதோர்:</u> பா புவனேந்திரா, எஸ் சோதீஸ்வரன், கே ஜெயவரதன், ந.ரவீந்திரன், வை தயாளன்

### *Patrons*

| | | | | |
|---|---|---|---|---|
| *Mrs R Jeyaratnam* | *Mr K Jogeeswaran* | *Dr S Navaratnam* | *Mr G Natkunan* | *Mr A Vairavamoorthy* |

### *Executive Committee*

| | | | |
|---|---|---|---|
| *President* | *Mr A.Wimalathasan* | *Treasurer* | *Mr V Balasubramaniam* |
| *Vice President* | *Dr S Sivakumar* | *Asst. Treasurer* | *Mr V.Sivananthara jah* |
| *Secretary* | *Mr T Sambanthan* | *Sports Secretary* | *Mr V Sivathas* |
| *Asst. Secretary* | *Mr S Kanesalingam* | | |

### *Committee Members*

| | | | |
|---|---|---|---|
| *B.Buvanendra* | *W.Ravendren* | *S Sotheeswaran* | *K.Jeyavarathan* |
| *G.Balakulendiran* | *N Sri Gengatharan* | *W.Jeyabalan* | *Miss A. Selvarajah* |
| *V.Thavamuruganathan* | *R Ramanathan* | *T.Kumaran* | *N.Guganesan* |
| *W Raveendran* | *A.Ravi* | *N.Srisabesan* | *Mrs Theva. Nathan* |
| *Mrs Bama Maheswaran* | *Mrs T Balasubramaniam* | *W. Thayalan* | |

# அதிபரின் அறிக்கை

24.06.2006 நிறுவியவர் நினைவுதின நிகழ்ச்சியின் போது அதிபர் ஆற்றிய உரையின் சாரம்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் உதயமான சைவமறுமலர்ச்சியின் விளைவாக பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களால் இக்கல்லூரி 1910ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஏழை விவசாயிகளின் பிள்ளைகளும் கல்வி பெறவேண்டும் என்ற உயரிய நோக்கோடு எமது கல்லூரியை அம்பனைக் கிராமத்தில் அவர் ஆரம்பித்தார். எத்தனையோ எதிர்ப்புக்கள் மத்தியிலும் அவரது விடாமுயற்சியும் தியாக சிந்தையுமே இன்று இக்கல்லூரியை உன்னத நிலைக்குக் கொண்டுவந்துள்ளது.

## மாணவர் தொகை

தற்போது எமது கல்லூரியில் 1262 மாணவர் கல்வி கற்று வருகின்றனர். இடம்பெயர்ந்தபின் சொந்த இடத்திற்கு வந்து 7 வருடங்களாகியும் பாடசாலைச் சுற்றாடலில் இன்றுவரை மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத நிலையிலும், பல சிரமங்களுக்கு மத்தியில் மாணவர்கள் தூர இடங்களில் இருந்து வந்து கற்கிறார்கள். பாடசாலைச் சுற்றாடலில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டால்

| தரம் | தொகை |
|---|---|
| 01 ~ 05 | 288 |
| 06 ~ 11 | 675 |
| 12 ~ 13 | 299 |

## ஆசிரியர்கள்

எமது கல்லூரியில் 22 ஆண்களும் 41 பெண்களுமாக மொத்தம் 63 ஆசிரியர்கள் சம்பளப்பட்டியலில் உள்ளனர். இவர்களில் இருவர் தற்காலிக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.திரு ஞ.ஹரிகரன் அவர்களின் நிதியுதவியுடன் உடற்பயிற்சி ஆசிரியரும் திரு இ.செல்வஸ்கந்தன் உதவியுடன் கணனி ஆசிரியரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் ஆற்றிவரும் சேவை பாராட்டக்கூடியதொன்றாகும்.

## பரீட்சைப் பெறுபேறுகள்

வசதிகுறைந்த நிலையிலும் எமது மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் எமது முத்திரையைப் பதித்து வருகின்றனர்.

- 2005 புலமைப்பரிசில் பரீட்சையில் 6 மாணவர் சித்தியடைந்தனர். தோற்றிய மாணவர்களில் 24 பேர் நூறிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றனர்.
- 2005 க.பொ.த சாதாரண பரீட்சையில் செல்வி பபிதா பாலச்சந்திரன் 9A, B பெறுபேறு பெற்றார். தோற்றிய 104 மாணவரில் 72 பேர் முழுமையான தகுதியும் 16 பேர் நுண் சித்தியும் பெற்று க.பொ.த உயர்தர பிரிவில் கற்கின்றார்கள்.
- க.பொ.த உயர்தர பரீட்சையில் 3 மாணவர் 3A சித்தி பெற்றனர்.

  பல்கலைக்கழக அனுமதிக்கு
  - தகுதி பெற்றோர் 103
  - அனுமதி பெற்றோர் 16

## கல்லூரியின் இன்றைய நிலை

15.09.1999 இல் இவ்விடத்திற்கு வந்து 7 ஆண்டுகள் சென்ற நிலையிலும் இன்றுவரை பாடசாலைச் சுற்றாடலில் மக்கள் குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் தூர இடங்களில் இருந்தே மாணவர்களும் ஆசிரியர்களும் வந்து செயலாற்றுகின்றனர். இ.போ.ச பஸ்சை நம்பியே பாடசாலை நடைபெறுகின்றது. இந்த வருட முற்பகுதியில் 162 ட ரக மேசை கதிரைகளை கல்விப் பணிப்பாளர் தந்து உதவினார். தேவையான மிகுதி தளபாடங்களை இந்த வருட முடிவுக்குள் தருவதாக கல்விப் பணிப்பாளர் அவர்கள் கூறியுள்ளார். நாட்டு நிலமை சீராக இருந்தால் தேவையான மிகுதி தளபாடங்கள் எமக்கு கட்டாயம் கிடைக்கும் என நம்பிக்கை உண்டு.

ஏற்கனவே கட்டப்பட்ட 70'X25', 110'X25' கட்டிட மேல்தள வேலைகள் உடனடியாக முடிக்கப்படாவிட்டால் அக்கட்டிடங்கள் பாதிப்படையும் அபாயம் உள்ளது.

கணனி கற்கை நிலையம் 23 கணனிகளுடன் திறம்பட செயற்பட்டு வருகின்றது. நிரந்தர ஆசிரியர் திணைக்களத்தால் நியமிக்கப்படாத நிலையில், பழைய மாணவர் திரு இ.செல்வஸ்கந்தன் அவர்களின் உதவியுடன் கணனி ஆசிரியர் திரு ம.இரகுநந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தரம் 6 தொடக்கம் 11 வரை பொதுவான கணனி கற்கை நடைபெறுகின்றது. தரம் 10 இல் 8 மாணவர் தொழில்நுட்ப பாடத்தில் ஒன்றான தகவல் தொழில் நுட்ப பாடத்தையும் க.பொ.த(உ.த) சகல மாணவர்களும் GIT பாடத்தையும் கற்கின்றனர்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

இச்சங்கம் பாடசாலையின் அபிவிருத்திக்கமைய நல்ல முறையில் செயற்பட்டு வருகின்றது. இச்சங்கத்தின் தலைவராக அதிபரும் செயலாளராக திரு க.ரவீந்திரா அவர்களும் பொருளாளராக திரு க.காராளசிங்கம் அவர்களும் செயற்பட்டுவருகின்றர்கள். உலக உணவுத் திட்டத்தின் கீழ், தரம் 1 தொடக்கம் 9 வரையான மாணவர்களுக்கு இலவச உணவு வழங்கலை திறம்பட நடாத்தி வருகின்றது. மகிந்த சிந்தனையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியுடன் (ரூபா 1,400,000) துரையப்பாபிள்ளை மண்டப மேல்மாடி புனரமைப்பு வேலைகள் சுமார் ரூபா 1,500,000 செலவில் திறம்பட செய்யப்பட்டு 21.06.2006 புதன்கிழமை தெல்லிப்பழை உதவி அரச அதிபர் திரு சு.முரளிதரன், தெல்லிப்பழை கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு ச.கைலைநாதன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் இச்சங்கம் பாடசாலையில் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் பணஉதவி செய்து வருகிறது.

## பழைய மாணவர் சங்கம்

பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் முன்னேற்றத்தை மையமாக வைத்து திறம்பட செயலாற்றி வருகிறது. கொழும்பிலும் பாரிஸ், லண்டன், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் நன்றாகச் செயற்படும் பழைய மாணவர் சங்கங்கள் காலத்துக்குக் காலம் கல்லூரியின் தேவைகளை அறிந்து உதவி வருகின்றன. தனிப்பட்ட முறையிலும் சில பழைய மாணவர்கள் உதவி வருகின்றனர்.

## கொழும்பு பழைய மாணவர் சங்கம்

முன்னாள் ஆசிரியர் திரு த.பூ.முருகையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட புலமைப்பரிசில் திட்டம் தொடர்ந்து இவ்வருடமும் க.பொ.த (சா.த) பெறுபேற்றின் அடிப்படையில் மாதம் ரூபா 1500 வீதம் 5A யிலும் கூடிய பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

## பாரிஸ் பழைய மாணவர் சங்கம்

ஆசிரியர் மற்றும் துணை ஆளணியினர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக ரூபா 550,000 அளவில் நிலையான வைப்பில் இட்டுள்ளது.

திரு எஸ்.கரிகரன் தனிப்பட்ட முறையில் உடற்பயிற்சி ஆசிரியர் திரு க.மயில்வாகனத்திற்கு மாதாந்தம் 3,000 ரூபாவை வழங்கிவருகின்றார்.

திரு பொ.இராஜகாந்தன் உதைபந்தாட்ட அணியினருக்கு 7 பாதணிகளை வழங்கியுள்ளார். இலண்டனில் உள்ள திரு ந.கிருபா ரூபா 5,000 அன்பளிப்புச் செய்துள்ளார

## இலண்டன் பழைய மாணவர் சங்கம்

சிறுவர் பூங்கா அமைக்க முழச்செலவையும் ஏற்று முற்பணமாக ரூபா 200,000வை பழைய மாணவர் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

முன்னாள் ஆசிரியர் திரு க.செல்வகுணச்சந்திரன் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிச் செலவிற்கும், திருக்கேதீஸ்வரம், மாவிட்டபுரத் திருவிழாக்களுக்குமான செலவுகளை ஏற்றுள்ளார்.

திரு சி.மோகன் தம்பதிகள் ரூபா 30,000 செலவில் 52 பிளாஸ்டிக் கதிரைகளை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

வைத்தியர் திரு சிறிபவானந்தராஜா ரூபா 10,000 அன்பளிப்புச் செய்துள்ளார்.

ஏற்கனவே ரூபா 25,000வை நினைவுப் பரிசிற்கு அளித்த வைத்திய கலாநிதி திருமதி சிவபாதநாயகி கனகசபை அவர்கள் 4 ஞாபகார்த்த பரிசில்களை வழங்க நிலையான வைப்பில் வைப்பதற்கு மேலும் ரூபா 75,000வை அனுப்பியுள்ளார்.

## கனடா பழைய மாணவர் சங்கம்

நிறுவியவர் தின பரிசளிப்பு விழாவிற்கான செலவாக வருடாவருடம் ரூபா 60,000வை அனுப்பி வருகின்றனர்.

பொறியியளாளர் திரு வே.நந்தீஸ்வரன் அவர்கள் ஐயரத்தினம் நினைவு தின செலவினை ஏற்றதோடு நிறுவியவர்தின பரிசளிப்பு வழாவிலும் பல ஞாபகார்த்த பரிசில்களை வழங்கி வருகிறார்.

கே.சுதர்சன் என்பவர் உடற்பயிற்சி ஆசிரியருக்கு மாதாந்தம் ரூபா 1,000, சுகாதாரத் தொழிளாளிக்கு மாதாந்தம் ரூபா 1,000, இலிகிதருக்கு மாதாந்தம் ரூபா 500 வீதம் ஒரு வருடத்திற்கான ரூபா 30,000 பழைய மாணவர் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளார்.

அமெரிக்காவில் வசிக்கும் வைத்திய கலாநிதி சண்சுந்தர் அவர்கள் ரூபா 150,000 பெறுமதியான நிழற்படப்பிரதி இயந்திரம் ஒன்றை கனடா, கொழும்பு கிளைகள் ஊடாக அன்பளிப்புச் செய்துள்ளார்.

முன்னாள் ஆசிரியர் இராமநாதன் குடும்பத்தினர் கொழும்புக்கிளையூடாக ரூபா 15,000 பெறுமதியான ஹார்மோனியம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

**அதிபர் சி சுந்தரலிங்கம்**

# Mahajana Day 2006
# மகாஜனாநாள் 2006

## ஐக்கிய இராச்சிய வாழ் மகாஜனன்களின் வருடாந்த ஒன்று கூடல்.
## Annual Get-together - Mahajana College OSA-UK.

கடந்த 19.08.2006 சனிக்கிழமை அன்று இலண்டன் மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் மகாஜனா நாள் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இலண்டன் குறொய்டனிலுள்ள ஆர்ச்பிக்ஷப் லன்பிராங் பாடசாலையில் காலை 10.30 மணியளவில் ஆரம்பமான இவ்விழாவிற்கு ஏறத்தாழ 250 பேர் வரையில் கலந்திருந்தார்கள். இவர்களில் கணிசமான மகாஜனா பழைய மாணவர்களும் அவர்களின் குடும்பங்களும் பங்குபற்றியிருந்தமை சிறப்பானதாகும்.

இந்நிகழ்வில் மகாஜனக் கல்லூரியின் இலச்சினை பொறித்த ரீ சேட் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது. பழைய மாணவர்கள் அனைவரும் அதனை வாங்கி அணிந்துகொண்டனர். அதனால் பெறப்பட்ட பணம் கல்லூரியின் உதைபந்தாட்டக் குழுவிற்கு சீருடை வாங்குவதற்காக அனுப்பவிருப்பதாக பழையமாணவர் சங்கத் தலைவர் திரு அ. விமலதாசன் கூறியிருந்தார்.

காலை நிகழ்வாக பத்து வயதிற்குட்பட்ட, 12 வயதிற்குட்பட்ட, 14 வயதிற்குட்பட்ட, 16 வயதிற்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டிகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வல்வை சிதம்பராக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் சங்க அணிகள் மோதியிருந்தன. இரண்டு வெவ்வேறு மைதானங்களில் நடைபெற்றுக்கொண்டிருந்த இந்தப் போட்டிகளை பார்த்துக்கொண்டிருந்த பார்வையாளர்கள் விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தியமை இலங்கையில் யாழ்ப்பாணத்தில் அந்நாளில் நடைபெற்ற உதைபந்தாட்ட நிகழ்சியை நினைவுபடுத்தியமை குறிப்பிடக்கூடியதாகும்.

இந்தப் போட்டிகளில் 10 வயதிற்க உட்பட்ட பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும்,12வயதிற்குட்பட்ட பிரிவில் மகாஜனாவும், 14 வயதிற்குட்பட்ட பிரிவில் வல்வை சிதம்பராவும் 16 வயதிற்குட்பட்ட பிரிவில் யூனியன் கல்லூரியும் வெற்றிபெற்றன. உதைபந்தாட்டப் போட்டியினைத் தொடர்ந்து சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. ஏராளமான சிறுவர்கள் மிகவும் உற்சாகத்துடன் போட்டிகளில் பற்குபற்றியிருந்தனர். சிறுவர்களின் பெற்றோர்கள் தமது சிறார்கள் வெற்றிபெறவேண்டும் என்ற உணர்வோடு சிறுவர்களை உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தனர்.

பகல் 12 மணிக்கு மகாஜனா பழைய மாணவர்சங்கத்தின் அங்கத்தவர்களின் கைச்சுவையில் கூழ், கொத்துரொட்டி, தோசை போன்ற உணவுப்பண்டங்கள் தயாராகிக்கொண்டிருந்தது. சுடச்சுட எல்லோரும் அதனை வாங்கி சுவைத்து மகிழ்ந்ததை அவதானிக்க முடிந்தது. தொடர்ந்து கயிறு இழுத்தல், பெரியவர்களுக்கான ஓட்டப்போட்டி, பெண்குளுக்கான கூடைப்பந்தாட்டம் போன்றவையும் நடைபெற்றது.

இந் நாளிற்கு பிரதம விருந்தினராக மகானஜாவின் பழைய மாணவரான வைத்தியர் கருணாகரன் அவர்கள் கலந்துகொண்டிருந்தார்கள். அவர் தமதுரையில் சிறுவர்களை நாம் ஊக்குவிக்கவேண்டும் என்றும், எமது நல்ல பழக்கங்களையும் பண்புகளையும் இளம் சமுதாயத்தினருக்குப் பரவவிடவேண்டும் எனவும் கூறியிருந்தார். தான் மகாஜனாவின் பழைய மாணவன் எனக் கூறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதாகவும் கூறினார். சிறப்பு விருந்தினராக திருமதி யாழின் சர்மா அவர்கள் கலந்துகொண்டிருந்தார்கள். இவர் தமதுரையில் கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு மிகச்சிறப்பாக இருந்ததாக குறிப்பிட்டிருந்தார்.

மாலை நிகழ்வில் பரிசளிப்பு வைபவமும் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மகாஜனக் கல்லூரியில் 1945 இல் கல்விகற்ற பழைய மாணவர்களையும் 1991 இல் கல்விகற்ற பழைய மாணவர்களையும் சந்திக்க முடிந்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

~ வரதன், பாரிஸ்.

## நூற்றாண்டை நோக்கி ~ மகாஜனா

~ மகாஜனன் நாக சிறிகெங்காதரன் ~

இன்னமும் நான்கு ஆண்டுகளில் எமது மகாஜன அன்னைக்கு நூறு வயதாகின்றது 1910ம் ஆண்டு தெல்லிப்பழை அமெரிக்கமிசனின் தலைமையாசிரியராக இருந்த தெயிலர் துரையப்பாபிள்ளை அவர்களின் சிந்தனையில் கிராமத்தின் சைவப்பிள்ளைகள் சைவச் சூழ்நிலையினில் தமது கல்வியைப் பெறுவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் என்ற கருத்து உருவாகியது.

**1910** தானே அதற்குக் கால்கோள் இடவேண்டும் என எண்ணிய துரையப்பாபிள்ளை அவர்கள் தனது தலைமையாசிரியர் தொழிலைத் துறந்து சைவப்பிள்ளைகள் உரியவகையில் கல்விகற்பதற்கான பாடசாலையை ~ மகாஜனாவை உருவாக்கினார். இவருடன் இணைந்து அமெரிக்க மிசனிலிருந்து வெளியேறிய சில மாணவர்களை வைத்து **14~10~1910** அன்று புதிய பாடசாலைக்குத் தனது வீட்டிலேயே கால்கோள் இட்டார். நா சங்கரப்பிள்ளை க இலங்கநாயகம் ஆகிய ஆசிரியர்கள் அமெரிக்கமிசன் பாடசாலையிலிருந்து விலகி இவருடன் இணைந்து புதிய பாடசாலையில் ஆசிரியர்களாகக் கடமையாறினார்கள்.

**1912** தற்போது கல்லூரி அமைந்துள்ள அம்பனையில் புதிய கட்டிடம் ஒன்றினைக் கட்டி பாடசாலையை அங்கு மாற்றினார். மகாஜனாவை நன்கொடை பெறும் பாடசாலையாக பதியும் முயற்சி சேர் அ கனகசபை அவர்களின் ஊடாகத் தொடங்கப்பட்டது. மகாஜனாவின் மாணவர்களை பொதுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்குமாறு நிர்வாகம் வேண்டுகோள் விடுத்தது. இந்த இரண்டு முயற்சிகளும் ஆரம்பத்தில் நிராகரிக்கப்பட்டன. 1916இல் பொதுத் தேர்வில் தோற்றும் அனுமதி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. 1918இல் பாடசாலைக்கான நன்கொடை வழங்கும் முடிவு எடுக்கப்பட்டது.

**1919** நவீன வசதிகளை நோக்கிய மகாஜனாவின் வளர்ச்சிப்படியில் முதற் காத்திரமான கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டது. T~வடிவில் அமைந்த இக்கட்டிடத்தின் உருவாக்கலுடன் மகாஜன வரலாற்றின் புதிய அத்தியாயம் ஒன்று தொடக்கி வைக்கப்பட்டது.

**1929** யூன் மாதம் 24ம் திகதி துரையப்பாபிள்ளை அவர்கள் அமரராகியதைத் தொடர்ந்து கா சின்னப்பா அவர்கள் பாடசாலையின் நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்து புதிய தலைமையாசிரியரானார்.

**1945** பதின்மூன்று ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்த தெ து ஜயரத்தினம் அவர்கள் கா சின்னப்பா அவர்களின் மறைவினைத் தொடர்ந்து கல்லூரியின் நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்து தலைமையாசிரியரானார். *மகாஜனாவின் பொற்காலத்திற்கான தொடக்கம் இங்கே தான் ஆரம்பமானது.*

புதிய கட்டிடங்களுக்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. திறமையான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். புதிய திறமையான விஞ்ஞான ஆசிரியர்கள் பலர் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டார்கள். இவர்களின் அர்ப்பணிப்பான சேவைகள் கல்வித்துறையில் மிகப் பாரிய முன்னேற்றங்களை உருவாக்கியது. இவைகள் சாதனைகளாக உருமாற்றம் பெற்றகாலகட்டத்தில் ஏனைய துறைகளிலும் மகாஜனா வெற்றிகளைப் பெறத் தொடங்கியது. திரு ஜயரத்தினம் அவர்கள் தனது சீரிய அர்ப்பணிப்பான தலைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றார், பழைய மாணவர்கள், ஊரவர்கள் என அனைவரையும் இணைத்தார். யாருமே ஏன் வேறு எந்தப் பாடசாலையும் எண்ணிப் பார்க்கமுடியாத, பெறுமதிமிகக சாதனைகள் மகாஜனாவை மிக மிக உன்னத நிலைக்குக் கொண்டு சென்றது.

மகாஜனக் கல்லூரியின் சரித்திரத்தையும் அதனது மிக உயர்வான சாதனைகளையும் சாதாரணமான ஒருவரால் எண்ணிப்பார்ப்பது முடியாத காரியம். கல்வித்துறையோடு சம்பந்தப்பட்டவர்களால் அல்லது சமூக ஆராச்சியாளர்களால் மாத்திரமே இதன் பெறுமதியை அளவிடமுடியும். ஏனெனில் மகாஜனாவின் வளர்ச்சிக்கு முன்னதாகவே இலங்கை முழுமையிலும் ஏன் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே பல பாடசாலைகள் வளர்ச்சி பெற்ற சாதனைக்குரிய நிறுவனங்களாக விளங்கின. அப்படியான பாடசாலைகளோடு சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு கிராமத்துப் பாடசாலையின் வளர்ச்சியும் சமூகத்திற்கு அதன் பங்களிப்பும் புரிவது கஷ்ட்டமானது. அதிலும் அதனது பெறுமதிமிக்க சாதனைகளை ஜீரணிப்பதோ அல்லது புரிவதோ கஷ்டமாகவே இருக்கும். ஏனெனில் தத்தமது பாடசாலைகளில் பற்றுக் கொண்டவர்களாகவே இவர்கள் இருப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதனது வெளிப்பாட்டை புலம் பெயர்ந்த நாடுகளில் எம்மவர்களால் நடாத்தப்படும் பழைய மாணவர் சங்கங்களைப் பார்த்தாலே உணரலாம் இந்த மண்ணில் மாத்திரம் சுமார்

அறுபது தமிழ்ப் பழைய மாணவர் சங்கங்கள் இயங்குகின்றன.

மகாஜனாவின் சாதனைக்குச் சான்று பகரும் வண்ணம் யூனியன் கல்லூரியின் சிறந்த அதிபராக விழங்கிய க பாலசுந்தரம் அவர்கள் சமீபத்தில் எழுதி வெளியிட்ட *'பொற்காலம்'* – யூனியன் கல்லூரி நினைவுகள் பதிவுகள் என்ற நூலில் குறிப்பிட்டவைகள் அமைகின்றன. அவர் சொல்லுகின்றார் *'மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து ஏறக்குறைய ஒரு மைல் தொலைவிலுள்ள நிறுவனம். புவியியல் அமைவு யூனியன் கல்லூரியைப் போலப் பெரிதாக அமையாத கல்லூரி. மாணவர்கள் சாரி சாரியாக, அவசர அவசரமாக, தெல்லிப்பழைச் சந்தியைக் கடந்து நடந்து விரைந்து செல்வதை அவதானித்தேன். இரண்டு பலசரக்குக் கடைகள் என வைத்துக் கொள்வோம். அவை ஒரு மைல் இடைவெளியில். ஒன்றைக் கடந்து நடந்து சென்று அடுத்த பலசரக்குக் கடைக்குச் செல்கிறார்கள் என்றால் அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். அதே நிலை தான் யூனியன் கல்லூரிக்கும் இருந்தது. ஒப்பிட்டுப் பேசுவதை யாரும் தவறாக வியாக்கியானம் செய்ய வேண்டாம். வெற்றியின் மாய மந்திரம் எங்கே மறைந்திருக்கின்றது என்று அறிய முயல்கின்றேன். மகாஜனக் கல்லூரியைப் பற்றி எனக்கு மிகப் பெருமையான எண்ணம் உண்டு.மரியாதை உண்டு. அதன் உயர்வுக்கு உழைத்த கனவான்களின் திறமையை நான் அலசிப் பார்த்தது உண்டு. அது கொடி கட்டிப் பறந்ததை யாராலும் மறைக்க முடியாது. புவியியல் அமைவு பெரிதாகப் பொருந்தாத பொழுதிலும் எப்படி அவர்களால் அப்படியான எழுச்சியைக் காண முடிந்தது? அதன் சாதனைகளைக் கண்டு வியந்தேன் அற்புதமான முயற்சியின் எழுச்சி. என்றும் அந்தக் கல்லூரிக்கு எனது இதயத்தில் கௌரவமான தனியிடம் உண்டு.'* மாற்றுக் கல்லூரி ஒன்றின் அதிலும் போட்டிக் கல்லூரியான யூனியன் கல்லூரியைத் தலைமை தாங்கி உயர்த்திய பெருமகனின் சத்தியமான சாட்சியம் இது.

எமது மண் தந்த இன்னுமொரு அறிஞரான் பேராதனைப்பல்கலைக்கழகத்தின் பொறியியற்துறைப் பேராசிரியர் சி சிவசேகரம் அவர்கள் மகாஜனக் கல்லூரி ஈழத்துத் தமிழிலக்கியத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பைப் பற்றிக் கூறுவதைப் பாருங்கள். லண்டன் ~ பாரிஸ் மகாஜனப் பழைய மாணவர் சங்கங்கள் இணைந்து 1996ம் ஆண்டு வெளியிட்ட *'அதிபர் ஒருவரின் கூரிய பார்வையில்'* என்கின்ற அதிபர் பொ கனகசபாபதி அவர்களின் கட்டுரைத் தொகுப்பிற்கு எழுதிய அணிந்துரையில் பின் வருமாறு குறிப்பிடுகின்றார். *'ஒரு பாடசாலையிலிருந்து நல்ல இலக்கியவாதி ஒருவர் வந்தால், அது அப் பாடசாலையின் சிறப்பாக இருக்க அவசியமில்லை. ஒரு சிலர் வருவது கூடத் தற்செயலானதாக இருக்கலாம். எக்கச்சக்கமான தொகையில் வந்தால் அங்கே என்னவோ விஷயம் இருக்க வேண்டும். அதற்கும் பாடசாலையின் கல்விச் சூழலுக்கும் ஒரு தொடர்பு இருக்க வேண்டும் வெறும் ஏட்டுப் படிப்பிற்கும் மேலாகச் சமுதாயச் சார்பான விஷயங்களைப்பற்றி அக்கறை காட்டும் ஒரு நிறுவனமே அதை இயலுமாக்க வல்லது.அதன் கல்விச் சூழல் நல்ல மாணவர்களைச் சிறந்த மனிதர்களாக்க வல்லது. ஆற்றலுள்ள ஆசிரியர்களைச் சிறந்த வழிகாட்டிகளாக்க வல்லது.* இவ்வாறான நிறுவனங்கள் ஒரு நாளில் உருவாவதில்லை. இவற்றிற்குப் பின்னாலுள்ள கடுமையான உழைப்பும் சமுதாய அக்கறையும் ஆரோக்கியமான சிந்தனையுடையோரது பங்களிப்பும் வெளியிலிருந்து பார்க்கும்போது தெரியாது' ஒரு அறிஞனின் அற்புதமான வார்த்தைகள் இவை. இவைகளை திரும்பவும் ஒருமுறை நினைத்தலே மகாஜனாவுடன் உறவுகொண்ட யாருக்குமே புல்லரிக்கும். அப்படியாயின் இந்த வெற்றிச் சரித்திரத்தின் பங்குதாரர்களுக்கும் சாட்சிகளிற்கும் எப்படியிருக்கும். எங்களில் பலர் பங்குதாரர்கள் மாத்திரமல்ல. சாட்சிகளுமே.

மகாஜனக் கல்லூரிச் சமூகத்தைச் சார்ந்தவர்களான நாங்கள் பெருமைப்படக் காரணங்கள் பலவுண்டு. விவசாயிகளும் தொழிலாளர்களும் நிறைந்ததான ஒரு கிராமமாகவே தெல்லிப்பழைக் கிராமம் விழங்கியது. இன்றைய தெல்லிப்பழையை நினைத்துப் பாருங்கள். எம்மவர் எட்டுப் பேர் இலங்கையின் பாராளுமன்ற அங்கத்தவர்களாக இருந்திருக்கின்றார்கள். எவ்வளவு பேர் இலங்கையின் அரச நிர்வாகத்தை இயக்குபவர்களாக இருக்கின்றார்கள். சமூகத்தில் சகல துறைகளிலும் உயர்ந்து நிற்பவர்கள் பலர் தெல்லிப்பழைக் கிராமத்தைச் சோந்தவர்களே. புலம் பெயர் நாட்டிலும் மதிப்புக்குரியவர்களாக இருப்பவர்களில் பலர் எம்மவரே. இவற்றிற்கு எல்லாம் ஆதார சுருதியானது மகாஜனாவின் தோற்றமும் வளர்ச்சியுமே. யூனியன் கல்லூரியின் பங்களிப்புக் கணிசமாக இருந்தாலும் மகாஜனாவின் பங்களிப்பு எமக்கெல்லாம் பெருமை தரத்தக்கது.

தமிழ்மக்கள் மத்தியிலுள்ள கல்வி நிறுவனங்கள் எல்லாமே ஏதோ ஒரு விதத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரால் அல்லது இந்து

நிறுவனங்களால் அல்லது பணக்காரர்களால் உருவாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட நிறுவனங்களே. ஆனால் மகாஜனக் கல்லூரியும் தேவரையாளி இந்துக் கல்லூரியும் இவற்றிற்கு விதிவிலக்கானவை. தேவரையாளி இந்துக் கல்லூரி தான் சார்ந்த சமூகத்தின் உயர்ச்சியை நோக்கமாகக் கொண்டு சூரன் என்ற அறிஞரினால் உருவாக்கப்பட்டு அந்தச் சமூகத்தவர்களின் ஆதரவினாலே வளர்த்தெடுக்கப்பட்ட நிறுவனம். மகாஜனக் கல்லூரி துரையப்பாபிள்ளை என்கின்ற சமூக சிந்தனை கொண்ட அறிஞரினால் தனது ஊரவர்கள் அனைவரது உயர்வும் தேவையும் கருதி உருவாக்கப்பட்டது. இதனது வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் மகாஜன சமூகத்தின் பங்களிப்பே பிரதானமானதும் காத்திரமானதுமாகும். பொற்காலம் எனப்படுகின்ற எழுபதுகளின் ஆரம்ப காலம்வரை அரச உதவிகள் எமது கல்லூரிக்குப் பெருமளவில் கிடைக்கவில்லை. இதனாலேயே மகாஜனக் கல்லூரி சமூகத்தின் ஒரு அங்கமான கல்லூரியாகவே விளங்கியது. இன்றும்கூட அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள்ளே இருக்கின்ற மகாஜனக் கல்லூரியில் 1,500 பிள்ளைகள் தினமும் சென்று படித்து வருகின்றார்கள் என்றால் எமது சமூகத்தவர்களின் உள்ளங்களில் மகாஜக்கல்லூரிக்கு எவ்வளவு உயர்வான இடம் இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

எம்மத்தியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற கொடூரமான போரினால் மகாஜனக் கல்லூரி பலதடவைகள் இடம்பெயர வேண்டியேற்பட்டது. அப்படியான வேளைகளில் வெவ்வேறு பாடசாலைகளில் செயற்பட வேண்டியிருந்தது. இத்தகைய கல்லூரிகள் தாங்கள் காலை நேரத்தில் செயற்பட்ட பின்னர் எமக்கு பிற்பகல் வேளைகளில் வகுப்புக்களை நடாத்த அனுமதி தந்தனர். இதனால் எமது மாணவர்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளானார்கள். இதனை நன்குணர்ந்த அன்றைய அதிபர் நாகராசாவும் அவர் தலைமையிலான மகாஜன சமூகமும் மீண்டும் ஒரு *புதிய மகாஜனாவை* உருவாக்க முயன்றனர். இதன் விளைவாக மருதனாமடம் சந்திக்கு அருகாமையில் 53 வகுப்பறைகளுடன் கூடிய *புதிய மகாஜனா* (வசதிகளுடன கூடிய தற்காலிக கொட்டகைகள்) உருவாக்கப்பட்டது. அன்றைய மாணவர்கள் முன்னைய மாணவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி நிதி சேகரித்தார்கள். புனர்வாழ்வு அமைச்சின் செயலாளராக இருந்த எமது புகழுக்குரிய பழைய மாணவர் திரு இலங்காநேசன் அவர்கள் அமைச்சின் மூலமாகக் கணிசமான உதவிகளைச் செயது கொடுத்தார். எமது லண்டன் கிளையினரும் அதிபரின் தேவைகளை முழுமையாக நிறைவுசெய்தனர். ***புதிய மகாஜனாவை*** உருவாக்கிய இந்த அற்புதமான நிகழ்வு எமது சரித்திரத்தில் முக்கியமான ஒன்றாகும். வேறு எந்தப் பாடசாலையும் இப்படி ஒரு திட்டத்தை நினைத்துப் பார்க்கவே முடியாது நாம் மீண்டுமொருமுறை பெருமை கொள்ளலாம்.

எமது அன்னையைப் பற்றிச் சொல்ல நிறையவே இருக்கின்றது. எதைச் சொல்வது. கிராமத்துப் பாடசாலை ஒன்று மிகப்பெருமளவில் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை ஆண்டுதோறும் அனுப்பியதனையா வருடந்தோறும் பெருந்தொகையில் மாணவர்கள் சென்றமையால் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் *மகாஜன மாலை* நிகழ்வைத் தொடர்ந்து நடாத்தியதையா. விளையாட்டுத் துறையில் யாழ் மாவட்டத்தில் பெற்ற வெற்றிகளையா. அல்லது உதைபந்தாட்டத்தில் இலங்கை முழுவதிலும் இரண்டு முறையும் யாழ் மாவட்டத்தில் தொடர்ந்து எட்டுமுறையும் சாம்பியன்னளாகி சரித்திரம் படைத்ததையா. அல்லது அகில இலங்கைத் தமிழ் நாடகப் போட்டியில் தொடர்ந்து ஐந்து முறை வெற்றிபெற்ற சாதனையையா. பெண்களை முன்னிலைப் படுத்தத் தயங்கிய காலத்தில் பெண் மாணவர்களை அறுபதுகளிலேயே நாடகங்களில் நடிக்க வைத்ததையா. இப்படி எத்தனை எத்தனை.

ஆனால் இன்றைய மகாஜனாவின் மாணவர்கள் நாம் சென்ற நூற்றாண்டில் பெற்ற வசதிகளையே பெறமுடியாதவர்களாக உள்ளனர். போர் ஒரு முக்கியமான காரணம். ஆனாலும் நாம் பெற்றவைகளை இன்றைய மாணவர்களுக்கு நாம் செய்தாக வேண்டும். இந்த மாதம் மகாஜனாவிற்குப் புதிய அதிபர் ஒருவர் பதவியேற்கிறார். அவரின் தலைமையில் சகல வசதிகளையும் கொண்ட மகாஜனாவை நாம் கட்டியாக வேண்டும். இது முடிவுற்ற பின் 1910ல் நடைபெற உள்ள நூற்றாண்டு விழாவைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். புதி அதிபரின் தலைமையில் மகாஜன சமூகம் முழுவதையும் இணைத்த வேலைத் திட்டம் ஒன்றினை உருவாக்கி நடைமுறைப் படுத்த முயலவேண்டும். கடந்த காலங்களைப் போலலே எமது லண்டன் மகாஜனாவினர் முன்னணியில் செயற்படவேண்டும்.

*இதற்கு அனைத்து மகாஜனன்களும் பழையமாணவர் சங்கத்தின் தலைமையில் ஒன்றுபட வேண்டும்.*

**வெல்லுக மகாஜன மாதா!**

# மகாஜனக்கல்லூரி

ஈழத்து இலக்கிய வரலாற்றில் பாவலர் துரையப்பாப்பிள்ளை

பேராசிரியர் கா. சிவத்தம்பி

**றெ**யிலர் அருளம்பலம் துரையப்பாபிள்ளை என ஆரம்பத்தில் அறியப்பட்ட பாவலர் துரையப்பா பிள்ளை, யூனியன் கல்லூரியாக மாறுவதற்கு முன்புதான் தெல்லிப்பழை அமெரிக்க மிசன் பாடசாலையின் தலைமை ஆசிரியராக இருந்தார். கிறிஸ்தவராக இருந்தவர் சைவராக மாறி சைவப் பிள்ளைகளின் கல்வி முறை பற்றிச் சிந்திக்கலானார். ஆங்கில ஆட்சியின் பெறுபேறாக மதமாற்றம் இடம்பெற்றதும் அதன் பின்னரான கலாசாரப் பாதிப்புக்களையும் நன்கு உணர்ந்த பாவலர், சைவப்பிள்ளைகள் சைவச்சூழலில் கல்விகற்பதனை விரும்பினார். தன்னுள் உதித்த சிந்தனைக்கு வடிவம் கொடுக்குமுகமாக தன்னுடைய தலைமையாசிரியர் தொழிலை உதறிவிட்டு மகாஜன தமிழ்ப் பாடசாலையை உருவாக்கினார்

தெல்லிப்பளை என்கின்ற கிராமத்தை இலங்கை முழுவதிலும் அறிய வைத்துப் பெருமைப்படுத்திய முக்கியமான காரணி மகாஜனக் கல்லூரியேயாகும். 1910 ஆம் ஆண்டு பாவலர் துரையப்பா பிள்ளை என்கின்ற அறிஞரால் உருவாக்கப்பட்டு அவரின் தலைமகனாம் அமரர் ஜயரத்தினத்தால் இலங்கை முழுமையிலும் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாக இக்கல்லூரி வளர்த்தெடுக்கப்பட்டது. எமது ஊரவர்களினாலும் நாட்டின் அறிஞர் பெருமக்களாலும் ஒரு கிராமத்துப் பல்கலைக்கழகம் என மகாஜனக்கல்லூரி பெருமையாக அழைக்கப்படுகின்றது. அறுபதுகளில் தொடங்கி மிக அதிக எண்ணிக்கையில் மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்புகின்ற சில பாடசாலைகளில மகாஜனக்கல்லூரி குறிப்பிடத்தக்கது. தொடர்ச்சியாகப் பெருமளவு மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும் நாட்டுக்குத் தந்த கல்வி நிறுவனங்களில் இது முதன்மையானது. எமது நாட்டின் மிகச்சிறந்த எழுத்தாளர்களையும், கவிஞர்களையும், அறிஞர்களையும் பத்திரிகையாளர்களையும் பெருந்தொகையாக சமூகத்திற்குத் தந்த கல்வி நிறுவனம் மகாஜனவே.

கல்விக்கு மேலாக விளையாட்டுத்துறையில் இக்கல்லூரி பெற்ற வெற்றிகளும் செய்த சாதனைகளும் ஒரு சரித்திரமாகும். உதைபந்தாட்டத்தில் பல தடவைகள் யாழ். மாவட்ட சாம்பியன்களாக இக்கல்லூரியின் 1967 இல் இருந்து தொடர்ந்து எட்டு ஆண்டுகள் முதலாம் பிரிவின் சாம்பியன்களாகி சாதனை படைத்ததுடன் 1971 இலும் 1978 இலும் இலங்கைச் சம்பியன்களாகித் தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்த்தனர் உதை பந்தாட்டத்தில் இரண்டாம் மூன்றாம் பிரிவுகளிலும் பல தடவைகள் மாவட்டத்தின் வெற்றி வீரர்களானதுடன் கிரிக்கெட்டிலும் ஹொக்கியிலும் பல தடவைகள் சம்பியன்களாகினர்.

இலங்கை முழுமைக்குமான பாடசாலைகளிற் கிடையிலான நாடகப்போட்டிகளில் தொர்ந்து ஐந்து தடவைகள் இக்கல்லூரியின் ஆசிரியர் கவிஞர் கதிரேசபிள்ளை எழுதித் தயாரித்த நாடகங்கள் வெற்றி பெற்றன. இன்றைக்கும் பெண் கதாபாத்திரங்களில் பெருமளவில் ஆண்களே நடிக்கின்ற எம்மவர் மத்தியில் நாற்பது ஆண்டுகளிற்கு முன்னரே மாணவிகளை துணிச்சலுடன் நடிக்கவைத்து மேடையேற்றிய பெருமை இக்கல்லூரிக்கு உரியது.

போரின் அநர்த்தங்களையும் அதனது கொடுமையான விளைவுகளையும் முழுமையாகத் தரிசித்து பாதிப்புற்ற முக்கியமான கல்லூரி மகாஜனவே. இலங்கை முழுமையிலும் உள்ள கல்வி நிறுவனங்களிலே ஒரு செல்வந்தரினதோ அல்லது செல்வந்தக் குடும்பத்தினதோ உதவி இல்லமல் முற்றிலும் பொதுமக்களின் பணத்தனாலே கட்டப்பட்ட ஒரே கல்வி நிறுவனம் இக்கல்லூரியாகும். 2010 ஆம் நூற்றாண்டு காண்கின்ற இக்கல்லூரி பத்து ஆண்டுகளிற்கும் மேலாக பல்வேறு இடங்களில் அகதி வாழ்வு வாழ்ந்துவிட்டு கடந்த நான்கு ஆண்டுகளாக மீண்டும் தனது சொந்த மண்ணில் சேவையாற்றத் தொடங்கியுள்ளது. மகாஜனா மீண்டும் புதியபொலிவு பெறத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி கொழும்பு ஹொலிடே இன் ஹோட்டலில் கல்லூரி அதிபர் திரு. சுந்தரலிங்கம் தலைமையிலே உலகம் முழுவதும் வாழும் மகாஜனன்களின் சர்வதேச மாநாடு அடுத்த பத்து ஆண்டுகளிற்கான திட்டம் ஒன்றைத் தீட்டிச் செயற்படுத்தத் தொடங்கியுள்ளது.

எனினும் மகாஜனா தொடர்ந்தும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் தான் செயற்படுகின்றது. இது ஆசிரியர்களையும், மாணவர்களையும் பெரிய அளவில் பாதிக்கின்றது. இந்தக் கஷ்டநிலைமை மாறினால் கல்லூரி மீண்டும் புதுப்பொலிவு பெறும் என்பதில் ஐயமில்லை.

# நிறைந்தவாழ்வு ~ தெ.து.ஜயரத்தினம்

பேராசிரியர் சு. வித்தியானந்தன்

இவ்வுலகில் யாரும் தன்னந்தனியாகப் பிறக்கவில்லை. பலகோடி மக்கள் பிறந்து வாழும் உலகில் நாமும் பிறந்துவாழ்கின்றோம். ஆனால் எல்லோரும் நிறைவு வாழ்வு வாழ்வதில்லை. மனிதன் வாழ்க்கைக்கு உதவியாக என்னென்னவோ தேடி அலைகின்றான். செல்வம் பதவி, புகழ் முதலியவற்றில் அவன் அலையும் அலைப்புக்கு அளவு இல்லை. ஆனால் புறநடையாக ஒரு சிலர் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்வை அர்ப்பணித்துப் பல துறைகளிலே தொண்டாற்றி நிறைந்த வாழ்வு நடாத்திச் செல்கின்றனர். அத்தகைய சிலருள் ஒருவரே ஜயரத்தினம் அவர்கள்

அப்பெருந்தகையை நாம் எடை போடும்போது தலைசிறந்த கல்விமானாக, சமூகத்தொண்டனாக, சமய ஊழியனாக, எல்லாவற்றிற்கும் மேலாக மனிதஅபிமானியாக அவரை நேசிக்கின்றோம்.

இருபத்தைந்தாண்டு தலைமையாசிரியராக அவர் கடமையாற்றிய காலத்தில் மகாஜனக்கல்லூரி ஈழத்தின் வேறெந்தக் கல்லூரியும் காணாத விருத்தியை அடைந்து ஈழத்தின் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாகக் கணிக்கப்பட்டு புகழ் பெற்றது. கிராமப்புறத்தில் நிறுவப்பட்ட கல்லூரி பட்டணத்தாரும் பிற பிரதேசத்தாரும் விரும்பி நாடும் கல்லூரியாக மாறியது யாவரும் அறிந்ததே. ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் ஊர்மக்களையும் தம்வசப்படுத்தி கல்லூரியைத் துரிதமாக அவர் வளர்ச்சியடையச் செய்ததின் இரகசியம் யாது? தமது தகப்பனார் நிறுவிய கல்லூரி என்ற உரிமை கொண்டோ, அடக்குமுறை அதிகாரம் கொண்டோ அவர் இதனைச் செய்யவில்லை. எல்லோரின் ஒத்துழைப்பையும் இலகுவாகப் பெறக்கூடிய வகையில் கல்லூரியின் முன்னேற்றம் அவர்களது கடமையென்ற உணர்வை ஏற்படுத்தி சாந்தமான முறையில் யாவரையும் தம்வசப்படுத்தும் ஒழுங்குகளைக் கடைப்பிடித்து கல்லூரி மகாஜனத்தின் கல்விப்பீடம் என்ற கருத்தைப் பதியச் செய்து தமக்கேயுரிய பணிவான அடக்கத்துடன் செயற்பட்டதனாலேயே பிற தலைமையாசிரியர் காணமுடியாத வெற்றியை அவராற்காணமுடிந்தது.

கல்வி அமைச்சினாலும் கல்விமான்களினாலும், பொதுமக்களாலும் தலைமை ஆசிரியருக்குச் சிறந்த

எடுத்துக்காட்டாகக் கணிக்கப்பட்டுக் கல்வியுலகிலே பெருஞ் சாதனைகளை நிலைநாட்டியும் விட்டார்.

தெல்லிப்பழையினைப் பொறுத்தவரையில், அவரைப்போன்ற சிறந்த சமூகத்தொண்டனை, சிறந்த சமய ஊழியனை நாம் கண்டதில்லை. கடந்த நாற்பதாண்டுகளாக தெல்லியூர் அவரின் தொண்டினாற் பல துறைகளில் முன்னேற்றமடைந்துள்ளது. அவர் வளர்த்துவிட்டுச் சென்றிருக்கும் கலை, கல்விக்கூடம் ஒரு சமயநிலையமாகவும் விளங்குகின்றது. கிறிஸ்தவ சமயச் செல்வாக்கு ஒரு காலத்தில் மேலோங்கியிருந்த தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரியின் புனித சூழலினால் இன்று ஒரு சைவப் பூமியாகத் திகழ்கின்றது. மாணவர்களை ஆலயப்பணியில் ஈடுபடச்செய்த அப்பெரியாரின் தொண்டுக்குச் சின்னமாக இன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் காட்சியளிக்கின்றது. தலைமையாசிரியப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின் இக்கோயிலின் திருப்பணிக்காக முழுமூச்சுடன் செயலாற்றி வந்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவரின் மனித அபிமானத்திற்காக நாம் அவரை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். மனித இனத்தை எப்போதும் அன்போடு நோக்கியவர் அவர். சிரிப்புப் பொங்கி வழியும் அவர் முகத்தை நாம் என்றும் மறக்கவே இயலாது. தம்மை நாடிவந்த எவரையும் எந்நேரத்திலும் எத்தனை தடவையும் அன்போடு வரவேற்று இனிது மொழிந்து வழியனுப்பி வைக்கும் பெருமகனார் அவரைப்போல வேறொருவரும் இல்லையெனலாம்.

அவருக்கு ஏற்ற மனைவியாகத் திகழ்ந்த திருமதி.ஜயரத்தினம் அவர்கள் பண்பான முறையில் யாவரையும் வரவேற்று இனிய முகத்துடனும் அன்பு மொழியுடனும் உபசரித்து வந்தார். தமிழர் கண்ட இல்லக்கிழத்தியின் நற்பண்புகள் யாவும் நிரம்பப்பெற்ற அவர் கணவனின் வாழ்க்கைக்குச் சுடராக விளங்கிய மங்கையர் திலகம் இப்போது தன்னந்தனியாகத் தவிக்கின்றார். அவருக்கும் உள்ளம் ஒடிந்து ஏங்கியிருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் இறைவன் நல்வழி வகுத்து அருள்செய்வர் நல்லவர் குடும்பம் தழைத்தோங்கும்

நன்றி~மகாஜனன் 1976

## வாணியின் வீடும் வளவும் (அதுதானே பாத்தன்)

மகாஜனன் இளவாலை விஜயேந்திரன் ~ ஒஸ்லோ, நோர்வே.

**வா**ணி என்றதும், ஏதாவது ஒரு வாணியை யோசித்துக் குழம்பத் தேவையில்லை, பாடசாலை விட்டு நான் நீங்கி கால் நூற்றாண்டுக்கு மேலாகிறது. என்னுடைய அறிவுக்குகெட்டிய வரையில் வாணி என்று ஒருவரும் என்னுடைய வகுப்பில் படித்த நினைவில்லை. ஒரு வருடம் முன்னதாய் ஒருவரும் மூன்று வருடங்கள் முன்னதாய் இன்னொருவரும் படித்த ஞாபகம். இவர்கள் கதை வேறு, எனது கதை வேறு. அதை விட இந்த வாணி வேறு. மஹாகவியின் கவிதைகளைப் படித்தவர்களுக்கு இந்த வாணியைத் தெரியும்.

அந்தக் காலத்தில் ஒரு தடவை 'மகாஜன தந்த கவிஞர்கள்' என்ற கட்டுரைப் போட்டி பாடசாலையில் நடந்தது. பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த எனக்கு மகாஜன தந்தது ஒரு கவிஞர் என்பது தெரியும். கெஞ்சம் ஓடி முளித்ததில ஒரு பரம்பரையே மகாஜனவோடு தொடர்புடைய கவிஞர்கள் என்பது தெரியவந்தது. அம்பனை பெருவெளியில் அடிக்கும் வயற்காற்றே இதற்கு காரணமா என்பது எனக்குத் தெரியாது. அப்படியே இருந்தாலும், வயலோர பள்ளிகளில் எல்லாம் படைப்பாளிகள் பூத்துக்குலுங்கியல்லவா இருக்க வேண்டும். உண்மையில் காற்றல்ல கவிதைக்கு காரணம்.

மகாஜன படைப்பாளிகள் வரிசை முடிவுற்று நீண்டு செல்வது எனக்குத் தெரியும். அதன் தொடக்கமும், எல்லோருக்கும் தெரிந்ததுதான். சரியான விளம்பர ஒளி கிடைக்காததானால் மங்கித் தெரிந்த பாவலர் துரையப்பாபிள்ளைதான் தொடக்கம். அவரது மிடுக்கான தோற்றத்தை பாடசால மண்டபத்தில் அடிக்கடி பார்த்திருக்கிறேன். அந்தக்காலத்தில் அவரது பாடல்களும் படைப்புகளும் சரியாக கவனிக்கப்பட்டிருந்தால் அவர் புகழோ வேறு விதமாகியிருந்திருக்கும். மகாஜனாவை ஆரம்பித்தவர் அவர் என்ற பெருமையை பெற்றாலும், உண்மையில் பாவலரால் ஆரம்பிக்கப்பட்டது மகாஜன என்ற பெருமைதான் பாடசாலைக்கு கிடைத்திருக்க வேண்டும்.

பாவலர் காலத்திலிருந்து இன்றுவரையிலான மகாஜன படைப்பாளிகளின் பட்டியல் சற்றே நீண்டது. சரியான முறையில் மகாஜனவின் படைப்பாளிகளின் பட்டியலும், அவர்களது படைப்புகளும் ஆவணப்படுத்தப்பட்டிருந்தால் நல்லது. இதுவரை அவ்வாறு செய்யப்படிராவிட்டால் யாராவது அத்திருப்பணியை செய்வது நல்லதாய் படுகிறது. அவ்வாறு ஒரு கருமத்தை எண்ணித் துணியும் எண்ணம் எனக்கு இல்லை. சரியான தகவல்களை திரட்டும் வசதிகளும் தொடர்புகளும் எனக்கில்லை. ஆயினும், எமது பாடசாலைக்கு ஓர் இலக்கியச் சூழல் வாய்த்த கதையைப் பல்வேறு தலைமுறைகளைச் சார்ந்த படைப்பாளிகளிடம் கேட்டுப் பதியும் முயற்ச்சியை யாராவது செய்யமாட்டார்களா என்ற ஆதங்கம் எப்போதும் எனக்குண்டு.

மகாஜன சூழல்தான் என்னைப் படைப்பாளியாக்கியக உருவாக்கியது என்று கூறுபவர்களை நான் சந்திருக்கிறேன். கண்ணுக்கு தெரியாமல் ஒரு மாய சக்தியாய் இயங்கிய அந்தச் 'சூழல்' என்ன என்கின்ற சூக்குமம் ஆளுக்கு வேறுபடும். ஒருவருக்கு ஆசிரியராய், ஒருவருக்கு சக படைப்பாளியாய், அந்த சூக்குமம் இருந்திருக்ககூடும். அவற்றைத் தொகுத்து அடுத்த தலைமுறைக்கு படிக்க கொடுத்தால் ஓரிரு படைப்பாளிகள் தோன்றக் கூடுமால்லவா?

அண்மையில் சேரன் இங்கு வந்திருந்தார். சேரன் எங்கே படித்தார் என்று கதைத்தபோது, 'மகாஜன' என்று அறிந்தவுடன், நான் எங்கே படித்தேன் என்பதை ஒரு நண்பர் கேட்டார், 'நானும் மகாஜன' என்று கூறியபோது 'அதுதானே பாத்தன்' என்றார். அந்த இரு சொற்களிலும் பல அர்த்தங்கள் இருந்தன. மகாஜனவில் படித்த ஒருவர் படைப்பாளியாக வருவதில் எந்தவெரு தடையும் கிடையாது என்பது அவரது அபிப்பிராயம். மெய்தான்.

நாங்கள் ஆறாம், ஏழாம் வகுப்புகளில் படித்தபோது உயர்தர வகுப்பில் படித்த பொ. இரகுபத், க நாகேஸ்வரன் போன்றோர் 'சங்கமம்' என்ற சஞ்சிகையைக் கொண்டு வந்தார்கள். பாடசாலை முடிந்த காலத்தில் இவர்கள் அதை ஓர் உயர்தர கலைசார்ந்த அறிவியற் சஞ்சிகையாக கொண்டுவந்தார்கள். பிறகு சேரன், ஆதவன், புராந்தகன் இணைந்து வெளியிட்ட 'ஞாயிறு' என்ற சஞ்சிகையை மிகுந்த கவனத்தையீர்த்தது. கையெழுத்து சஞ்சிகைக்கு ஒன்றுக்கு இலங்கை வானொலி விமர்சன அரங்கு செய்தது, அது 'ஞாயிறு' சஞ்சிகையைக்குத்தான்.

சிலவருட இடைவேளையின் பின் சபேசன், ரவி, பாலசூரியன் ஆகியோருடன் நானும் இணைந்து வெளியிட்ட 'புதுசு', இன்றுவரை பலரால்

நினைவுகூரப்படுகிறது. அது வெளிவந்தபோது நாம் உயர்தர வகுப்பு மாணவர்கள். அதற்கு நிதியுதவி திரட்ட உதவியவர்கள் 'யுகதர்மம்' நாடகத்தோடு அவைக்காற்று கழகத்தினர். அதற்கு சிலவருடங்கள் முன்பு, பாடசாலை நிதியுதவிக்காக 'பிச்சைவேண்டாம்' எங்கள் பாடசாலையில் மேடையேறியதும் நினைவுக்கு வருகிறது. காலங்களுக் மட்டுமே சொந்தம் என்ற கருதப்பட்ட நவீன நாடகங்களும் கிராமத்தில் மேடையேற்றலாம் என நிரூபித்த சம்பவங்கள் இவை.

ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் தவித்து பார்க்கமுடியாத அரசியல் அங்கத நாடகமான 'திருவிழா'வை எழுதிய மாவை நித்தியும், இயக்குனர் ஆதவனும், இசையமைத்த பராபரனும் நடித்த பலரும் கூட மகாஜனன்களே.

எமது பள்ளிக் காலங்களில் கவிதை, சிறுகதைப் போட்டிகள் ஒவ்வொருவருடமும் நிகழும். எழுதாதவர்களையும் எழுதவைக்கும் ஈர்ப்பு அந்த போட்டிகளுக்கு இருந்தது. அப்போதை போட்டிகளில் திறைமையைக் காட்டியவர்கள் பின்னர் எழுதாமல் விட்டது ஆச்சரியமும் கவலையும்தான். இந்த போட்டிகளில் வென்ற கதைகளை இருவேறு சந்தர்பங்களில் மாணவர்கள் தொகுதிகளாக வெளியிட்டனர்.

நான் பிறக்கமுன்னே பலர் இந்த இலக்கியப் பாரம்பரியத்தை வளர்த்தருக்கிறர்கள் இலக்கிய மும்மூர்த்திகள் என்று போற்றப்பட்ட மாககவி, அ ந கந்தசாமி, அ செ முருகானந்தன் போன்றோர் கற்ற இலக்கியத்தை முழ வீச்சோடும் வீரியத்தோடும் வெளிபடுத்தியவர்கள. மகாஜனாவிற் கற்று அங்கேயே கற்பித்தவர் எனது தமிழாசிரியர் என்று நான் பெருமை கொள்ளத்தக்க கவிஞர் செ கதிரேசம்பிள்ளை அவர்கள் எழுத்திலும் இயக்கதிலும் உருவான ஐந்து நாடகங்கள் தொடர்ச்சியாக அகிலஇலங்கை போட்டடியில் முதலிடம் பெற்றவை.

ஒரு படைப்பாளி மகாஜவின் பாரம்பரியத்தில் வந்தவர் என அடையாளங் கொள்வதும் அவரை 'எம்மவர்' என மகாஜனன்கள் அடையாளங் காண்பதும் கூட மகாஜனவுக்கான தனித்துவமொன்றே கருதுகிறேன் ஏனெனில் ஏனைய பாடசாலைகள் மூலம் படைப்பாளிகள் உருவாகியிருக்கிறார்கள் ஆனால் அவர்கள் தங்களை பாடசாலைச் சூழலோடும் பாரம்பரியத்தோடும் இணைந்திருக்கிறார்களா என்பது கேள்விதான் மகாஜன இலக்கியபச் சூழல் அதை அனுபவித்தவர்க்கு வரபிரசாதம்

என்னும் நான்கு வருடங்களில் கல்லுரியின் நூற்றாண்டு நிறைவு வருகையில் இந்த இலக்கிய பரம்பரை பற்றிய சரியானதோர் பதிவை யாராவது செய்தால் நல்லதெனப்படுகிறது.

அழிவுற்றும் தலைநிமிரும் எம்தாய் மண்ணுக்கும் எமது பாடசாலைக்கும் அரியதோர் பங்களிப்பாய் அமையுமென்பதில் ஐயமில்லை.

*abaran@online.no*

## மொழிச் சமத்துவம் வேண்டும்



இந்த நாட்டிலுள்ள இரு மொழிகளுக்கும் சமத்துவம் வழங்கப்படல் வேண்டும். இந்த விடயத்தில் தமிழர்கள் ஒன்றாகவும் பிளவுபடாமலும் இருக்கின்றார்கள். நாம் வேறோரினத்தினால் தன்மயமாக்கபடுவதையோ அகத்துறிஞ்சப் படுவதையோ ஏற்றுகொள்ளப்போவதில்லை. எமது மொழிக்கு இரண்டாந்தர நிலை வழங்கப்படுவதை நாம் நிராகரிக்கிறோம். எமது தேசிய உணர்வு தூண்டப்படுள்ளதால் நாம் எமது உரிமைகளை விட்டுக்கொடுத்து இணக்கம்காண ஆயத்தமாக இல்லை. நாட்டைப்பிளவுபடுத்தக்கூடிய இப்பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பு அணைவரையும் சார்ந்துள்ளது. இதற்கான முற்று முழுதாகப் பெரும்பான்மையோரிடம்தான் உள்ளது என்பது எனது நம்பிக்கை.

திரு.தெ.து ஜெயரத்தினம்
*Daily News 21.12.1955*

# தெல்லிப்பழை பற்றிய தேடலும் நினைவுகளும்

மகாஜனன் ஆ. சிவநேசச்செல்வன்
பிரதிப் பணிப்பாளர் இலங்கை இதழியல் கல்லூரி

உலகத்தை ஒரு நாடாக மாற்ற முடியும் என்ற கவித்துவக் கனவு அறிந்தோ அறியாமலோ தெரிந்தோ, தெரியாமலோ கலங்கிக் கொண்டிருக்கின்றது. வாழ்க்கைப் போராட்டங்களின் மத்தியிலே கடந்த காலத்து நிகழ்வுகளையும், அனுபவங்களையும் நிகழ்காலத்தோடு இணைத்து இரைமீட்டுப் பார்ப்பது ஒரு வகையிலே அற்புதமானது மட்டுமல்ல சுவையானதும் கூட.

பல்வேறு ஏற்ற இறக்கங்களுக்கு மத்திலான தமது இருபத்தி ஐந்து வருடகாலத்து இல்வாழ்க்கைப் பயணத்தின் நிழலிலே ஒரு சிறிய கிராமத்தின் கனவுகளை இணைத்து நினைவு கூர முற்படுவது ஒரு இனிய சுகானுபவமாக இருக்கின்றது. பாரம்பரியத்தேடலும், வரலாறும் பாண்பாட்டின் மூலவிசை. தெல்லிப்பழை என்ற பிறந்த மண்ணையும், அம்பனை என்ற சிறிய குறிச்சியையும் மனதார நேசிக்கும் எனக்கு, பிறந்து மொழி பயின்ற காலத்தின் பின் சென்ற நூற்றாண்டின் அறுபதிகளில் தெல்லிப்பழையைத் தேடும் முயற்சியில் இறங்கி குறிச்சிப் பெயர்களையும், தெலிவளவு, தெல்லியம்பளை, தெல்லியன் குடியிருப்பு எனப் பட்டியல் இட முற்பட்டமை நினைவுக்கு வருகின்றது. மாவை. சின்னக்குட்டிப் புலவர் பாடிய தண்டிகைக் கனகராயன் பள்ளியில் உள்ள நீண்ட முடிவுரை முதல் யாழ்ப்பாண வைபவ கொமுதி என்ற கல்லடி வேலுப்பிள்ளையின் வரலாற்று நாள் வரை தேடிப்பார்த்தேன். இது தொடரப்படவேண்டிய நீண்ட வரலாற்றாய்வு.

தெல்லிப்பழையைத் தெல்லிப்போல என தெலிபொல எனவும் தல்லிப் பள்ளி எனவும், தில்லிப்பள்ளி எனவும் இடப்பெயர் பற்றி ஆராய்ந்த வ. குமாரசாமி (1932) கைமண்காசிச்செட்டி (1834) சுவாமி ஞானப்பிரகாசர் 1317 முதலியோர் ஆராய்ந்து, சொற்சிலம்பம்ஆடியுள்ளனர். இடம்பெயர் ஆராய்ச்சி ஒரு புதிய துறையாகவே மாறிவிட்டது.

மொத்தத்திலே பழை என்பது குடியிருப்பு அல்லது மக்கள் வாழும் பகுதி என்று பொருள்படும். யாழ்பாணப் பிரதேசத்தலே தெல்லிப்பழை மட்டுமல்ல பளை, புலோப்பளை, பெரியபழை, வராத்துப்பளை, விடத்தற்பளை என்ற பல ஊர்கள் காணப்படுகின்றன. இலங்கையிலே வற்றாபளை, பட்டிப்பளை போன்ற ஊர்ப் பெயர்களும் உள்ளன.

மாவிட்டபுரம் தல வரலாற்றோடு இணைந்து மாருதப்புரவீகவல்லி குதிரை முகம் நீங்கி இளைமை பெற்று தல்லிப் பள்ளியில் வாழ்ந்தாள். அதுவே தெல்லிப்பழையாயிற்று என்று கதையும் கூறப்பட்டுள்ளது. நம்பொத்த என்ற சிங்கள நூலிலே தெல்லிப்பழை என்பது தெலிப்பொல என்று கூறப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வரலாற்று ரீதியாக தெல்லிப்பழை என்ற கிராமத்தின் நீதி மூலத்தையும், நதிமூலத்தையும் தேட முற்பட்ட ஆய்வுகள் சுவாரசியமாக நடந்தேறியுள்ளன. தெல்லிப்பழையிலே, தொண்டை மண்டலத்து காரைகாட்டு வேளாளர் வந்து குடியேறி வாழ்ந்தனர் என்பது யாழ்பாணக் குடியேற்ற ஆய்வின் மூலம் கூறப்பட்டுள்ளது. கனவாய் நனவாகிப் போன பழைய வரலாற்றின் தொடர்ச்சியாக இப்பொழுது தெல்லிப்பழை என்ற பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் எல்லாம் புலம் பெயர்ந்து சிதறிப்பேயுள்ளனர்.

இந்த வகையிலே பாரம்பரிய குடியிருப்புக்களையும் நினைவோட்டப் பதிவுகளைச் சென்ற காலத்தின் பழுதிலாத்திறன்களையும் அசை போடுவது கூட அவசியமானது. நினைவுக்கு எட்டிய வகையிலே தெல்லிப்பழை, தெல்லியம்பதியாகவுமும் தெல்லி நகராகவும் சிறப்பிக்கப்பெற்றமை கூட வரலாறாகி விட்டது.

தெல்லிப்பழையிலே 17 ஆம் நூற்றாண்டில் வழ்ந்து பேதுருப் புலர் தமது சந்தியோடுமுடையோர் அம்மானையில் (1647) துங்கமுடிபோலுயர்ந்த வல்லிக்கிராமமம் எனவும் திருநகராம் தெல்லிக்கிராமம் எனவும் பாடியுள்ளார். இது போல 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாவை. சின்னக்குட்டிப்புலவர் பங்கமான சங்கதோங்கிய வாவி மாவிடு தெல்லிப்பழை நாளும் வாழ்வென்று கூறலாய்குடியிலே எனப் பாடியுள்ளார். தெல்லிப்பழையில் உள்ள பத்தாவத்தை என்ற பகுதியில் வாழ்ந்த அருளப்ப் நாவலர் திருச்செல்வர் காவியம் என்ற பாரகாவியத்தையே எழுதினார். இவர் தெல்லிநகர் அருளப்பர் எனச் சிறப்பிக்கப்படுகின்றார்.

போர்த்துக்கேயராட்சிக் காலத்தில் தெல்லிப்பழையில் பால்டயங்ஸ் பாரியார் வாழ்ந்தார். இந்தக் காலம் முதலாகத் தெல்லிப்பழையிலே

கிறித்துவ பாரம்பரியம் வேரூன்றியாயிற்று. இதன் தொடர்ச்சியாக அமெரிக்க மிசன் பாடசாலை(யூனியன் கல்லூரி) அமெரிக்க மிசன் அச்சகம் வந்தமையுமே படிமுறையாக இந்தப் பிரதேசத்தில் ஒரு புதிய கல்விப்பாரம்பரியத்தையே வேரூன்ற வைத்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின முற்பகுதியில் இருந்து படிப்படியாக வெளியிடப்பட்ட ஆங்கிலக் கல்வித் தாக்கத்தின் எதிரொலியான பல நிகழ்வுகளின் களமாக தெல்லிப்பழை அமையலாயிற்று, நாவலர் பாரம்பரியத்தோடு வேகமடைந்த சைவமும் தமிழும் என்ற உணர்வின் பிரதிபலிப்பாகத் தெல்லிப்பழையில் பாவலர் துரையப்பாபிள்ளை, மகாஜனக கல்லூரியை ஆரம்பித்தமையும் புதிய வரலாற்றின் ஊற்றுக்கண்ணாக அமையலாயிற்று.

வட்டுக்கோட்டை செமினறியிற் பயின்று ரெயிலர் என்ற கிறிஸ்தவ நாமத்தைப் பெற்ற பாவலர் துரையப்பா பிள்ளை ஏற்படுத்த முயன்ற கலாசார மறுமலர்ச்சியின் விளை மூலமாக தெல்லிப்பழை மாறியமை ஒரு பெரிய வரலாற்று நிகழ்வாகும். பழம் பெருமை பேசிவாழ்ந்த யாழ்ப்பாணத்தைத் திருத்தும் தீர்க்கதரிசனக் குரலோடு எழுச்சி பெற்ற பாவலர் துரையப்பா பிள்ளையின் சிந்தனைப் புரட்சிதான் மகாஜனக் கல்லூரியின் தோற்றமாயிற்று.

இதே காலப்பகுதியிலே தெல்லிப்பழையில் ஜகாத் தம்பையாவின் குடும்பத்தினர் வாழ்ந்தனர். ஈழத்தின் முதலாவது பெண் நாவலாசிரியையாகிய மங்களநாயகம் தம்பையாவும் தெல்லிப்ழையிலே தமது சிந்தனைக் கருவூலங்களை வெளியிட்டார். தெல்லிப்பழை என்ற சிறிய கிராமத்தலே ஏற்பட்ட சமூக மாற்றம் சிந்தனைத் தாக்கம் ஆகியன நெறுங்குண்ட இருதயத்தின் மூலவிசையாக அமைந்தது.

பாவலர் துரையப்பாபிள்ளையின் வழிவழி மரபு செறிந்த தெல்லிப்பழை என்ற கிராமம் மீண்டு எழுச்சி பெற வேண்டும். மகாஜனக் கல்லூரி வளாகத்திலே மாங்காய்க்கு கல்லெறிந்து மகிழ மரத்தேறிப் பாங்காகத் தோழருடன் பள்ளிக்குச் சென்ற காலம் பசுமையானது. வாகை மரங்களும், நீண்டு நிமிர்ந்த பனைமரங்களும் மாமரங்களும், ஆலமரங்களும் செறிந்து வளர்ந்து செழித்த பூமியும் கல்லூரியின் முன்னே பரந்திருந்த வயல் வெளியுட் நெஞ்சில் நிழலாடுகின்றன. அம்பனையின் முன்னால் அடிக்கும் வயற்காற்றில் கொம்புலபிப் பூச்சொரியும் குடவாகை நம் பெரிய வெற்றிக்கு நாலு மலர் சூட்டிடவும் என்ற அமரகவிஞன் மகாகவியின் உணர்வுகள் செவிப்பறையை அதிர வைக்கின்றன. மகாஜனக் கல்லூரி என்ற வாணியின் வீடு மீண்டும் எழுச்சி பெற வேண்டும்.

## மும்மணிகள்

எழுத்தாளர் உலகில் பல முனைகளிலும் பிரகாசித்தவர் அ.ந.கந்தசாமி. கவீந்திரன் என்ற புனைபெயரில் கவிதை வடித்தவர். எமிலி சோலோ போன்ற பிறமொழி நாவல்களைத் தமிழாக்கிப் பிரபலமடைந்தவர். தீவிர கம்யூனிஸ்ட் எழுத்தாளர். கட்சிப் பத்திரிகையின் ஆசிரிய குழுவினர் மத்திய குழு உறுப்பினராக உயர்ந்தவர்.

அடுத்தவர் நாற்பதுகளில் பூத்த மறுமலர்ச்சிப் பத்தரிகையின் தாபக உறுப்பினர், அ.செ. முருகானந்தம். ஈழகேசரி, வீரகேசரி, சுதந்திரன் ஆகிய பத்தரிகைகளிற் பணியாற்றியவர். தமிழ் நாட்டில் வெளிவந்த சிறுகதைத் தொகுப்பொன்றில், அந்தக்காலத்து அதிசயமாக இடம் பெற்ற தனது மனித மாடு என் சிறுகதை மூலம் புகழ்பெற்றவர்.

மூன்றாமவர் து. உருத்திர மூர்த்தி. மகாகவி. அசாதாரணமான தன்னம்பிக்கை கொண்ட பெயர் பண்டிதர். பண்டிதரின் பரிணமிப்பே மகாகவி. ஏனைய இருவரும் ஒவ்வொரு பத்திரிகையைச் சார்ந்து வளர்ந்தவர்கள். கொம்பர் எதுவுமில்லாது வானுயர்ந்த கவிஞர். மகாகவி. மூவரும் நெருங்கிய உறவினர்கள். மகாஜனக் கல்லூரியில் வளர்ந்தவர்கள். அரகிசமணி இவர்களை மகாஜனா தந்த மும்மணி என்றார்.

அளவெட்டி தந்த நாலாவது மணி ஒன்றையும் இங்கே குறிப்பிட வேண்டும். அனைத்திலங்கை நாடகப் போட்டிகளில், அடுத்ததாக ஐந்து நீண்ட ஆண்டுகளாக மகாஜனக் கல்லூரியின் கழுத்தில் தங்கப் பதக்கங்களைத் தக்க வைத்தவர். கல்லூரி ஆசிரியர், நாடாக ஆசான், கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை. கல்லூரி அவரைத் தக்கவகையில் கௌரவிக்கத் தவறவில்லை.
இந்த நால்வரும் பெருமைதான்–எனது கிராமம், எனது குச்சி, எனது காலம். மகாகவி எனது சகமாணவன். குற்றமுடைத்தோ இக்கூற்று?

# யாழ்ப்பாண நூல் நிலையம்

~ மகாஜனன் ~ விமல்

இருபத்திஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, 1981ஆம் ஆண்டு யூன் முதலாம் திகதி இரவு ஒன்பது மணியளவில் தென்கிழக்காசியாவின் மிகச்சிறந்த நூல் நிலையங்களில் ஒன்றாகக் கருதப் பட்ட யாழ்ப்பாண நூல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. 97,000க்கும் மேற்பட்ட கிடைத்தற்கரிய நூல்களும், சுவடிகளும் எரிந்து சாம்பலாயின. தமிழர்கள் தம்மில் ஒரு பகுதியை தாம் இழந்ததாக உணர்ந்து, உருகி, உறைந்து போயினர். தமிழருக்கு மாறாத வலியையும், வடுவைவும் தந்தது.

## நூல் நிலையத் தோற்றம்

1933 ஆம் ஆண்டு மு.ஆ. செல்லப்பா என்ற அன்புள்ளம் கொண்ட தமிழன் தன்னுடைய இல்லத்தில் இலவச நூல் நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம் யாம் பெற்ற புலமைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்பும் நல்லெண்ணத்தைத் தெரிவித்தார். செல்லப்பாவின் சிந்தனையை ஏற்றுக் கொண்ட பல தமிழர்கள், 09~06~1934 அன்று ஒரு நூல் நிலையத்தை ஆரம்பித்தார்கள். அன்றைய நாட்களில் உயர் நீதிமன்ற நீதவானாக இருந்த திரு ஐசாக் அவர்கள் தலைவராகவும், திரு செல்லப்பா அவர்கள் செயலாளராகவும் இந்த நூல் நிலையக் குழுவினராகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இந்த நூல் நிலைய நிர்வாகக் குழுவினரின் அயராத உழைப்பின் காரணமாக 01~08~1934 அன்று, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஓர் வாடகை அறையில் 844 புத்தகங்களுடனும் 30 செய்திப் பத்திரிகைகள், மற்றும் சஞ்சிகைகளுடனும் ஒரு நூல் நிலையம் உருவானது. அறிவுத் தாகம் கொண்ட தமிழர்களின் ஆர்வமும் ஆதரவும் காரணமாகவும் நூல் நிலையத்தின் நூல்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகியது. ஜனவரி 1935 இல் யாழ்ப்பாணப் பிரதான வீதியில உள்ள ஒரு வாடகை கட்டிடத்திற்கு இடம் பெயர்ந்தது. 1936 இல் யாழ். மகாநகராட்சி மண்டபம் நிர்மாணிக்கப்பட்டபோது, நூல் நிலையம் இதற்கு அருகாமையில் உள்ள கட்டிடத்திற்கு மீண்டும் இடம் பெயர்ந்தது. அந்தக் காலத்தில், இந்த நூல் நிலையத்துக்குரிய சந்தா மூன்று ரூபாய்கள் ஆகும்.

## புதிய நூல் நிலையதின் தோற்றம்.

1953 இல் நிர்வாகக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. வணக்கத்துக்குரிய பிதா லோங் (Long) அவர்கள் இந்த நிர்வாகக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அன்னாரின் சிலையும் தீக்கிரையாக்கப்பட்டன்று சிரச்சேதம் செய்யப்பட்டது. திராவிடக் கட்டடக் கலை நிபுணரான K.S. நரசிம்மன், மற்றும் பேராசிரியர் இரங்கநாதன் அவர்களைச் இந்தியாவிலிருந்து அழைத்து அறிவுரைகளையும் பெற்று, 29~03~1953 ஆம் திகதியன்று இந்த நூல் நிலையத்திற்கு அத்திவாரம் இடப்பட்டது. 11~10~1959 இல் முதல் கட்டப் பணிகள் நிறைவு பெற்றன. 01~11~1967 இல் சிறுவர்களுக்கான பகுதி ஒன்று ஆரம்பிக்கப் பட்டது. 1971 இல் நூல் நிலையத்தின் முதல் மாடியில் கூட்டங்கள் நடாத்துவதற்காக மண்டபம் ஒன்றும் நிர்மாணிக்கப் பட்டது.

## யாழ் நூல் நிலையம் தீப்பிடித்து

மே மாதம் 31 ஆம் திகதி நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற தேர்தல் பொது கூட்டத்தில் நடாத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தின் போது ஒரு பொலிஸ் கொல்லப்பட்டார். இதனை அடுத்து துரையப்பா ஸ்டேடியத்தில் நிலை கொண்டிருந்த பொலிசார் பல கடைகள், பொதுமக்களின் வீடுகள் உடைத்தும் எரித்தும்; கொள்ளையிட்டும் அடாவடித்தனங்களில் இறங்கினர். யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் வீடும் வாகனமும் தீக்கிரையாக்கப்பட்டன.

அடுத்த நாள் இரவு யூன் 1 ஆம் திகதி யாழ் நூல் நிலையத்தின் மூன்றாவது மாடி தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. இந்த மூன்றாவது மாடியில் தான் கிடைத்தற்கு அரிய சுவடிகளும், மிக அரிய நூல்களும் இருந்தன. மிகவிரைவில் நூல் நிலையத்தின் சகல பகுதிகளுக்கும் தீ பரவியது. அன்றைய தினம் நடாத்தப்பட்ட கோர தாண்டவத்தில் ஈழநாடு பத்திரிகைக் கட்டடம் உட்பட முக்கியமான புத்தகக் கடைகள், யாழ் பெரிய கடை வீதியில் அமைந்திருந்த தமிழ்ப் புலவர்களின் சிலைகள், தமிழரின் பண்பாட்டு அடையாளங்கள் என்று கருதப்பட்ட விடயங்கள் மீது அழிவுத் தாக்குதல்களை நடாத்தப்பட்டது.

சுதந்திரம் பெற்ற நாடுகள் தமக்கு, தமது நாட்டுக்கு, தமது பண்பாட்டுக்கு வரலாற்று ரீதியாக நினைவு கூருவதற்காக மிக முக்கியமான ஞாபகப்படுத்தும் சின்னங்களைப் பாதுகாத்து வருவதை நாம் உலகளாவிய ரீதியில் காணக் கூடியதாக உள்ளது. அப்படிப்பட்ட நினைவுச் சின்னமும் இப்போது எமக்கு இல்லை.

விலை மதிப்பற்ற யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்ட போதும் மௌனமே மொழியாகிறது!.

## கலைகள் வளர்த்த கல்விக் கூடம் மகாஜனா

மகாஜனன், நாதஸ்வர வித்வான், சங்கீத நாதசாகரம்
அளவெட்டி இ.கேதீஸ்வரன்

கலைகள் ஓர் இனத்தினதும், நாட்டினதும் தனித்துவத்தைப் பிரதி பலிப்பவை. சிறப்பாகப் பாரம்பரிய கலைகளே, சம்பந்தப்பட்ட மக்களின் பண்பாட்டியல் வளர்ச்சியையும் கலாச்சாரத்தையும் எடுத்து இயம்புவனவாகும். கலாச்சாரங்களும், பண்பாடுகளும் அந்தந்த மக்களின் நாகரீகச் செழுமையின் அளவுகோலாகத் திகழ்கின்றன. ஓர் இனம் தனது தனித்துவத்தை இழக்காமல் இருப்பதற்கு சொந்தக் கலைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். அத்துடன் அழியாமல் பாதுகாக்கவும் வேண்டும். கலைகள் மறந்துவிட்டால் அல்லது மறக்கப் பட்டுவிட்டால், அந்த மக்களின் பூர்வீகம் அற்றுப் போய்விட்டதெனலாம்.

மனிதனது சிந்தனைகளும், உயர்ந்த பண்புகளும் கலை மூலமாக உலகிலே அறிமுகப்படுத்தப்படுகின்றன. அவன் தன் அறிவுத்திறத்தால் கலையைப் படைக்கின்றான். அவனின் கற்பனையிலே உருவான உணரர்ச்சிகளை வெளிப்படுத்தும் கலைப்படைப்பால் கலை உள்ளம் கொண்ட அனைவராலும் அவன் போற்றப்படுகின்றான். சிந்தனையின் முகப்பில் தோன்றிப் படைப்புத்திறனால் உருப்பெற்று இன்ப உணர்வுக்கு காரணமாகி அழகுத்தன்மையுடன் விளங்குவது கலை.

கலை மக்களது வாழ்வியலையும், நாகரீகத்தையும், பண்பாட்டையும் எடுத்துக்காட்டும் கண்ணாடி என்றும் சமுதாய நீதிகளையும், அறங்களையும் படம் பிடித்துக்காட்டிட கலையைப்போல் வேறெந்தச் சாதனமும் இல்லையென Dr.நாராயணசாமி அவர்கள் கலையும் மொழியும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கலைகள் அறுபத்து நான்கு வகைப்படும். அதில் இசை செவிக்கு இன்பத்தையும், மனதிற்கு சாந்தியையும், சிற்பம், ஓவியம் கண்களிற்கு நல்ல காட்சிகளையும், நாடகம், நடனம் கண்களிற்கும், செவிகளிற்கும் விருந்தாகவும், இலக்கியம் மனதிற்கு இன்பத்தையும், சிந்தனையையும் அளிக்கின்றன.

கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இயற்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை ஆகிய ஆறும் கவின்கலைகளாம். இக்கவின்கலைகள் மக்களின் உள்ளத்தை ஈர்க்கும் தன்மை பொருந்தியன. இக்கலைகளுள் இசைக்கலை மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இசை மனிதனுடைய செவிவழிசென்று உள்ளத்தைத் தொட்டுவிடுகின்றது. அதனால் அவன் தன்வசம்மிழந்து பரவசப்படுகின்றான். பழைய தமிழ் மன்னர்கள் இப்பெருமைமிக்க கலைகளையும் தமிழரின் கலாச்சாரம், நாகரீகம், பண்பாடு போன்றவற்றை அழியாமல் கலைக் கோயில்களாயும், கல்வெட்டுக்களிலும் பொறித்து, இக்கலைகள் பாதுகாக்கப்படவேண்டி மானியங்கள் போன்றவற்றை அளித்தும் வந்துள்ளனர்.

இச்சிறப்புமிக்க கோயில்கள், கலைக்கூடங்கள் போன்றனவற்றை முன்னோர்கள் நம்நலன் கருதியே அமைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இவைகள் அனைத்தும் எமது கலைச் செல்வங்களாகும். இதன்பொருட்டு எமக்குக் கிடைத்த வரப்பிரசாதங்களிலே மகாஜனாக் கல்லூரியும் ஒன்றென்றால் அது மிகையாகாது.

மேன்மை தங்கிய பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களால் தெல்லிப்பழையில் 1910ம் ஆண்டு இக்கல்வி நிறுவனம் ஸ்தாபிக்கப்பெற்றது. மிகவும் பாண்டித்தியம் பெற்ற ஆசான்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் நன் மாணாக்கர்களை உருவாக்கியும் இககல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வந்துள்ளார்.

அவரிற்குப்பின் மாண்புமிகும் மகனாம் மகாஜனா சிற்பி எனப்போற்றப்படும் ஜெயரத்தினம் ஆசிரியர் அவர்களால் இக்கல்லூரி மிகவும் பிரபல்யம் வாய்ந்த நிறுவனமாகப் புகழ் பெற்றது. இதற்குக்காரணம் இவரது அனுபவமிக்க ஆளுமை, கற்பித்தல் என்றால் மிகையாகாது. கல்லூரியில் நடைபெறும் விழாக்களின்போது சமயத்துறை, முத்தமிழ் (இயல், இசை, நாடகம்), விளையாட்டுத்துறை மற்றும் பல்கலைசார் துறைகளிற்கும் முக்கியத்துவம் அளித்தும் வந்துள்ளார். இத்துறைகளில் ஆர்வமுடையோரை இனங்கண்டு அவரவர் திறமைகளை வெளிப்படுத்துமுகமாக மேடையேற்றிப் பரிசல்கள், சான்றிதழ்கள் வழங்கியும் ஊக்குவித்துள்ளார்.

திரு ஜெயரத்தினம் அவர்களும், எனது தந்தையாரயகிய அளவெட்டி நாதஸ்வர வித்துவான் இரத்தினவேல் அவர்களும் ஒரே காலப்பகுதியில் இக்கல்லூரியில் கல்வி பயின்றவர்கள். அதேபோல் திரு ஜெயரத்தினம் அவர்களின் புதல்வன் தினகரனும் நானும் ஒரே காலப்பகுதியில் கல்விபயின்றமை

குறிப்பிடத்தக்கது. கல்வி கற்கும் காலப்பகுதியிலே நாதஸ்வரமும் கற்றுவந்தேன். இக்காலப்பகுதியில் மகாஜனாவின் பவளவிழா இடம்பெற்றுள்ளது. இதில் மதிப்பிற்குரிய அமரர் மாவிட்டபுரம் சண்முகசுந்தரம் ஆசிரியர் அவர்களால் வாழ்வு பெற்ற வல்லி_எனும் இசை நாடகம் எழுதி அரங்கேற்றப்பெற்றது. இந்நாடகத்தின் கருப்பொருள் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வரலாற்றை சித்தரிப்பதாகும். இவ்வாலயத்தின் நித்திய நைமித்திய வழிபாட்டிற்காக மாருதப்புரவீரவல்லியின் தந்தையாகிய சோழ மன்னன் சிதம்பரத்திலிருந்து தீட்சதர்களையும் சிற்பிகளையும், நாதஸ்வர தவில் இசைச் சேவைக்காக தமிழ்நாடு திருப்புகலூர் எனும் திருத்தலத்திலிருந்து சிவபுண்ணியனார் எனும் நாதஸ்வரக்காரரையும் அழைத்திருந்தார் என்பதும், இவர்களின் வழித்தோன்றல்களே இன்று ஈழத்தின் இசைவேளாளர் வம்சத்தினர் என்பதும் சமூக ஆய்வுகளின் கூற்று.

மேற்கூறிய நாடகத்திலே சிவபுண்ணிய நாதஸ்வரக்காரராக நான் பாத்திரமேற்று நடித்தும் பாராட்டுப்பெற்றமையும் திரு ஜெயரத்தினம் அதிபரால் கௌரவிக்கப்பெற்றமையும் என்வாழ்வில் மறக்கமுடியாத சம்பவமாகும். இன்று நான் எனது கலைப்பயணமாக எனது குழுவினருடன் எந்த நாடுகளிற்குச் சென்றாலும் அங்கங்கே பற்பல. துறைகளிலே புகழ்பெற்று விழங்கும் மகாஜனன்களையே காண்கின்றே னென்பது மகாஜனாக் கல்லூரியின் பெருமையைப் பறைசாற்றுவதாக அமைகின்றது

இக்கல்லூரியில் கல்விகற்று நாதஸ்வரக் கலைஞனாகப் பவளவிழாவில் நடித்து இன்று லண்டன் மாநகரிலே மகாஜனன்களால் முன்னெடுக்கப்படும் மகாஜனமாலை விழாவிலே நானும் எனது சகோதரரான நாதஸ்வர வித்வான் ஞானசம்பந்தனும், தவில் வித்வான்களாகிய அகிலஉலகத் தவில்மேதை தட்சணாமூர்த்தி அவர்களின் புதல்வன் உதயசங்கரும், தவில்வித்வான் குமாரசாமி சிவமூர்த்தி ஆகிய அனைவரும் இணைந்து நாதஸ்வரசக்சேரி நிகழ்த்துவதையிட்டுப் பெருமைகொள்கின்றேன். அத்துடன் அனைத்து மகாஜனன்களிற்கும் நன்றி கூறுவதோடு, இவ்விழா சிறப்பாகவும் வருங்காலங்களிலும் மகாஜனாக்கல்லூரி சிறப்புற்றுப் பெருமையுடன் விளங்க அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடைபெறுகின்றேன்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.
வெல்லுக மகாஜன மாதா.



# Mahajana Maalai 2006
# மகாஜனா மாலை 2006

பிரதம விருந்தினர்
மகாஜனன் *Dr V* சிவஞானவேல்

விசேட விருந்தினர்
மகாஜனன் *Dr T* உமைபாலன்

கௌரவ விருந்தினர்

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 4.30 . 5.00 | வாத்திய இசை – அர்யுனா விமலதாசன், அச்சுதன் சிவானந்தராஜா |
| 5.00 . 6.00 | **நாதஸ்வர தவில் கச்சேரி** ஈழத்து கலைஞர் மகாஜனன்கள் கேதீஸ்வரன், ஞானசம்பந்தர் (நாதஸ்வரம்) தட்சணாமூர்த்தி உதயசங்கர், சிவமூர்த்தி (தவில்) |
| 6.00 . 6.10 | **கிராமிய நடனம்** சுவாதி நீதவான், பவித்திரா பிரேம்பாபு |
| 6.10 . 6.20 | **நடனம்** காஜத்திரி சூரியகுமார், கீதா சூரியகுமார் |
| 6.20 . 6.40 | மங்கள விளக்கேற்றல் கல்லூரி கீதம் வரவேற்புரை விமலதாசன் (தலைவர்) பிரதம விருந்தினர் உரை *Dr. V* சிவஞானவேல் கௌரவ விருந்தினர் உரை *Dr. T* உமைபாலன் |
| 6.40 . 6.50 | **நடனம்** சுவாதி நீதவான், பவித்திரா பிரேம்பாபு, சிந்துயா யோகச்சந்திரபோஸ், சித்துரூபி சுகுமார் |
| 6.50 . 7.05 | **சோக்கிரட்டீஸ்** (நாடகம்) மகாஜனன் மா.தியாகீஸ்வரன் |
| 7.05 . 7.15 | **நடனம்** வீணா சிவநேசன் |
| 7.15 . 7.25 | **சர்ச்சை** (நாடகம்) க.பாலேந்திரா (நெறியாள்கை), பா.சத்தியேந்திரன், சி.கணேசலிங்கம், ச.வாசுதேவன், க.ஆனந்தநடேசன் சந்தோஸ் ஆனந்தன், பிரசாந் முருகதாஸ் |
| 7.25 . 7.40 | **நடனம்** சிந்துஜா பராபரன் |

| | |
|---|---|
| 7.40 . 8.15 | மகாஜனன்கள் வழங்கும் |
| | மாவை நித்தியானந்தனின் |
| | **ஐயா எலக்சன் கேட்கிறார்** (நாடகம்) |
| | அ.இரவி (நெறியாள்கை), சி.கணேசலிங்கம், அ.இரவி, |
| | விக்கினேஸ்வரன், ப.வை.ஜெயபாலன், அ.சிவதாஸ் |

## 8.15 . 8.30 இடைவேளை

| | |
|---|---|
| 8.30 . 8.40 | **நடனம்** |
| | காஜத்திரி சூரியகுமார், கீதா சூரியகுமார், |
| | ஜனனி ராஜா |
| 8.40 . 915 | **பிரத்தியேகக் காட்சி** (நாடகம்) |
| | க.பாலேந்திரா (நெறியாள்கை), |
| | ஆனந்தராணி பாலேந்திரா, மனோ மனுவேற்பிள்ளை, |
| | பா.சத்தியேந்திரன் |
| 9.15 . 9.20 | நன்றியுரை ~ ப.வை.ஜெயபாலன் |
| 9.20 . 9.40 | கலைஞர் கௌரவிப்பு |
| 9.40 . 11.00 | **கானசாகரம்** |
| | ஈழத்து இன்னிசை நிகழ்ச்சி |
| | (அவைக்காற்று கலைக்கழகம்) |
| | ஏ.மு.தேவலிங்கம், மா.சத்தியமூர்த்தி, |
| | மஞ்சுளா சத்தியேந்திரன், சௌமியா ஆனந்தநடேசன், |
| | ஆனந்தராணி பாலேந்திரா, தர்சினி சிவசுதன், |
| | விஜயகுமாரி பரமகுமரன், ரவிசங்கர், |
| | ஆனந்தநடேசன், சத்தியேந்திரன், உதயன், கஜன் |

| | |
|---|---|
| **மேடை நிர்வாகம்** | சண்முகராஜா, சிவானந்தராஜா |
| **உதவி** | சிவக்குமார், பாலகுமார், குமரன், சிவயோகி |
| **ஒலியமைப்பு** | சிவசுதன், கணேந்திரன் |
| **ஒளியமைப்பு** | ரமேஸ், இளங்கோ |
| **ஒப்பனை** | சசிகலா வாசுதேவன் |
| **நிகழ்ச்சித்தொகுப்பு** | ஜெயபிரபா பரா, ஆனந்தராணி பாலேந்திரா |
| **மேடையின் பின்** | தயாளன், விமலதாசன், பாலகுலேந்திரன், |
| | சம்பந்தன், சிவானந்தராஜா, பைரவி |
| | சிவக்குமார், கமலா ஜெயபாலன், அபிராமி |
| | விமலதாசன், ரதி புவனேந்திரா, சேயோன், |
| | குகனேசன், சபேசன், குலராஜன் |
| **நிழல்படம்** | புவனேந்திரா |
| ***Video*** | தீபம் தொலைக்காட்சி |
| **விழா அமைப்பு** | கணேசலிங்கம் |

நிகழ்ச்சித் தயாரிப்பு, கலாசாரப் பிரிவு
மகாஜனபழைய மாணவர் சங்கம் ஐக்கிய இராச்சியம்

**அனைவரும் வருக!**

**ஆதரவு தருக!!**

# கவிதைகள்

~ மகாஜனன்கள் ~

## ஒரு கிராமத்திற்கு மின்சாரம் வருகிறது

இலையோடும்
அலை ஓடும்
வயல் வெளியை வகிடெடுத்த
புதுத் தெருவின் எதிர் முகங்கள்
இரு புறத்தும் தலையுயர்த்தி
இருட்கறுப்பாய் எழுந்து நிற்கும்
கருந்தூண்கள்

வயல் வரம்பின் மேலேயும்
புல் சரிந்த
வாய்க்காலின் இருபறமும்
செயல் கெட்டுப் பலகாலம்
புரண்டிருந்த கருந்தூண்கள்
திடீரென்று உயிர்கொள்ளும்

கோழி குரல்கொடுத்து
அதிகாலை விழிப்பெடுக்கும்
என்னூரின் தலைமேலே
விஞ்ஞான விரிப்புக்கள்
கூரையின்றிச் சடசடத்த வாகனங்கள்
அவை காவும்

ஏணிகளும் தண்டுகளும்
ஒரு நாளில் தெருவிறங்கிக்
கம்பிகளும் கோப்பைகளும்
கருந்தூணை அரவணைக்கும்

தெருமேலே
வயல் மேலே
இன்னும் தொலைவு கொண்டு
திருப்பங்கள் நிறைந்திருக்கும்
கல்லொழுங்கை மேலேயும்
பளபளத்து நீள்கின்ற வெண்தகடாய்க்
கம்பிகளின் முடிவற்ற நீட்சி

பெருந்தெருவின் ஓரத்தில்
சடைத்திருந்த குடைவாகை
ஆலமரம் மலைவேம்பு
நிசியில் பயங்காட்டத்
தலை விரித்த பனைமரங்கள்
ஒவ்வொன்றாய்
இலையிழந்து
கிளையிழந்து
உடலிழந்து
உயிரிழக்கும்

குடைவாகை நிழல் விரித்த
பெருந் தெருவின் தார் விரிப்பில்
தடையின்றி வெயில் எரியும்

கரிக்குருவி பொந்தெடுக்கப்
பனங்காகம் கூச்சலிட
இருப்பாக அமைந்தபடி
தொலைவிருந்தும் பார்வை கொள்ளும்
பெருமரங்கள்
வெறுந்தூண்கள் சிலவற்றின்
தலையெடுப்பில் நிலம் தழுவும்

மதில்கள் குரொட்டன்
எனப் படர்ந்திருக்கும் வீடுகளில்
புதுமாற்றம் திடீரென்று.
தலைக்குமேல் விளக்கேந்திக்
கரகமிடும் சில வீடு
நீலத்தில் குளுகுளுப்பாய்க்
கோலமிடும் இன்னும் சில

எனினும் பல வீட்டில்
திரிதூண்டி விளக்கெடுத்துத்
தீப்பெட்டி உரசலினால்
மெதுமெதுவாய்ச் சிறு வெளிச்சம்
சிணுங்கிச் சிணுங்கி அழும்

இனிமேல் எனதூரில்
இருளில் முகம் காட்டும்
தெருவிளக்கு
நீண்டதென
விரைகின்ற கம்பிகள் மேல்
குருவிகளின் குடியிருப்பு.

~ சேரன்

## சோளகம் கொக்கரிக்கும் ஒரு கோடையில்

மாய இருளில்
ஆந்தை உருட்டும் விழியை
பார்க்கச் சகியாது
கண்ணைக் கசக்குகிறேன்

நீயுந்தான்
கண்ணைக் கசக்குவது போல்
ஒரு பரிவுக்கீறல்
என்னைப் பிளந்தது

நிமிர்கிறேன்
முன்னைய கோடையில், நீ
தந்துவிட்டுப்போன பதிவில்
ஏதோ கவ்விக் கிடப்பதை
என்னுள் உணர்கிறேன்
தொண்டையில் சுருக்கிடும்
அழுங்கு உலகின்

துயரம் தோய்ந்த
சுமைகள் நிறைந்தவன்,,, தொடராதே
என நான் பொய்யனாகி அழுத்தியதை
நிராகரித்து மேலும்
என் சுவட்டுள் சுமையானாய்

சேளகம் கொக்கரிக்கும்
அந்தக் கோடையில்
நீண்டபனை வெளிமருங்கில்
நடந்தபடி
வெடி பறந்த சிரிப்பொலி
சிலவேளை
கடிந்த உன் சிணுசிணுப்பை
ஊடறுத்து முறகியபடி
ஒரு பனங்காய் விழ
வெருண்டு
அணிற்பிள்ளை தாவும்
அப்போதும் நாம்
தலையைப் பொத்தியபடி
சிரித்திருப்போம்

பின்னைய கோடையில்
சோளகம் விசிறி இறைத்து
அறையுள் படர்ந்த புழுதியை
தட்டிக்கொடுத்தபடி
தூரத்து பனையில்
வெருண்டு தாவித்
தோற்று விழும்
அணிலாரைப் பார்த்து நெகிழ்ந்து

வாடை பெயர்த்து
முகிழ்த்த வசந்தில் , நாம்
சொரிந்து சருகாகி
எம்முள்
மாயை துளிர்த்து
கேள்விக்குறியின் கருவானோம்

~ பாலசூரியன்

## காதல் வரி

வானச் சிவப்பும்
விரிந்த தரையும்

பார்வைப் பரப்பின் குறுக்கே
கோடு கிழிக்கும் ஒற்றைப் பறவை
வீசும் காற்றில் மிதந்து
தானாய் வந்து மூக்கில் துழைகிற
பவளமல்லி
நிலவின் ஒளியில் சாரளத்தூடே
நான் தினமும் பார்க்கும்
மூன்று தென்னைகள்
நெளிந்து வளர்ந்ததில்
உயரம்குறைந்ததாய்

இரவும் பகலும்
பிரிய மனமேயின்றித்
தழுவிப்பிரியும் இந்தச் சில கண நேர
அந்திக்கருக்கலும்
எல்லாம் ஒன்றாய்
இன்றும் முன்னே இருந்தும்
அவை யாவும் தங்கள்
சோபையிழந்தன
அவளது உடனிருப்பில்

~ ஊர்வசி

## யாழ்ப்பாணம்.

யாழைக்கொணர்ந்திங்கு மீட்டியதால் ஒரு
யாசகன் மன்னனிடம் இருந்தோர்
பாழைப் பரிசு பெற்றான் எனக்கூறிடும்
பண்டைப் பழங்கதை கேட்டதுண்டு
பாழைப் பரிசு பெற்றாலும் அப்பாலையைப்
பச்சைப் படுத்திப் பயன் விளைத்து
வாழத் தொடந்து முயன்றதால் இன்று
வையத்து துயர்ந்தது யாழ்ப்பாணம்!

ஆழக்கடலுள் ஆமிழ்தனவே எங்கள்
அன்றைப் பெரும்புகழ் ஆதலினால்
வீழத்தொடங்கி முடிந்தன வாம் பல
விந்தை என்றோர் கதை வந்ததுண்டு
வீழத் தொடங்கிய விந்தை முழுவதும்
மீட்டுக்கொடுத்த பெருமையிலே
ஈழத் தமிழகம் என்று நிலம் தனில்
இன்று நிமிர்ந்தது யாழ்பாணம்!

ஆறு நடந்து திரிந்து வயல்கள்
அடைந்து கதிர்கள் விளைந்திட வான்
ஏறி உயர்ந்த மலை ஏதும் இல்லையே
என்ற ஒரு கதை சொல்வதுண்டு
ஏறி உயர்ந்த மலை இல்லை ஆயினும்
என்ன? இருந்தன தோள்கள் என்றே
கூறி உழைத்த பின் ஆறிக் கலைகளில்
ஊறிச் சிறந்தது யாழ்ப்பாணம்.

--இளவலை விஜயேந்திரன

# கவிஞர் செ. கதிரேசர் பிள்ளை

கவிஞர் திரு செ. கதிரேசர்பிள்ளை ஆசிரியர் மகாஜனக் கல்லூரியின் சிறப்பு மிக்க தமிழாசிரியர்களுள் ஒருவர். இலக்கணம், இலக்கியம், நாடகம் ஆகிய துறைகளில் ஆழ்ந்த புலமை உள்ளவராக இருந்தார். தொடர்ச்சியாக கல்லூரி மாணவர்களுக்கு உயர்ந்த தரத்தில் நாடகங்களை எழுது மேடையேற்றி வந்தமை, பாடசாலை நாடக அரங்கு என்று இப்போது வழங்கப்படுகின்ற ஒரு உப பிரிவின் தோற்றத்திற்கும் முக்கியமான பங்காளியாக இருந்தார்.

நாடகமும் அரங்கியலும் என்கிற துறை பல்கலைக்கழக மட்டங்களிலேயே தோன்றியிராத ஒரு காலத்தில் நாடகம் அரங்கு என்பன பற்றிய சிந்தனைகளையும் செயற்பாடுகளையும ஊக்குவித்தார். கதிரேசர்பிள்ளை அவர்கள். அவருடைய புராண இதிகாச நாடகங்களின் தொப்பு ஒன்று பாரதம் தந்த பரிசு என்ற பெயரில் வெளியாகி உள்ளது,

1940 களில் எழுச்சி பெற்ற மறுமலர்ச்சி கால ஈழ இலக்கியத்தின் அங்கமாகவும் அவர் விளங்கினார். ஈழத்து இலக்கய வளர்ச்சியில் மறுமலர்ச்சிக்காலம் முக்கியமான காலங்களில் ஒன்று விமர்சகர்கள் குறிப்பிடுவர். மறுமலர்ச்சி என்ற இலக்கிய சஞ்சிகையோடு இந்த காலம் தொட்பு படுத்தப்படுகிறது. வரதர், அ.செ.மு. சோ. தியாகராஜா அ.ந.க. மகாகவி, சம்பந்தன் வைத்திலிங்கம், பஞ்சாட்சர சர்மா போன்ற பலர் இக்காலத்தூடாக மேல் வந்தவர்கள்.

திரு கதிரேசர்பிள்ளை அவர்களின் கவிதைகள் பல இக்காலப் பகுதியில் பிரசுரமாகின. குழந்தைப் பாடல்கம் நிறை எழுதியிருக்கிறார். அவருடைய குழந்தைப் பாடல்களின் தொகுதி ஒன்று கதிரேசன் பாடல் என்றும் தலைப்பில் அழகிய நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

## பொந்திற் கிளியும் பூதனும்

வயலருகே நின்ற பல
தென்னைகளில் ஒன்று
புயலடித்து வட்டு வீழப்
பட்டுப் போச்சு தின்று

பட்டமரப் பொந்தினிலே
கூடமைத்துக் கொண்டு
முட்டையிட்டு வாழ்ந்தனவே
பச்சைக்கிளி ரணடு

அந்தவழிச் சென்ற பூதன்
பொந்திற் கிளி கண்டான்
அந்திவேளை வந்தவற்றைப்
பற்ற மனம் கொண்டான்

ஆசையுடன் பூதனங்கு
மாலையிலே சென்றான்
ஓசையின்றி ஏறியந்தப்
பொந்தருகே நின்றான்

உள்ளிருந்து கிளியிறகு
கோதுமொலி கேட்டான்
துள்ளுமனத்தோடு கையைப்
பொந்தில் மெல்லப் போட்டான்

சத்தமின்றிப் பற்ற வரும்
கையைக் கிளி கண்டு
கொத்திடவே பூதன் மிக
நொந்தலறிக்கொண்டு

கையெடுத்த போதில் மற்றக்
கையின் பிடி நழுவ
பையனவன் வீழ்ந்துருண்டான்
மண்ணை உடல் தழுவ

ஓலக்குரல் கேட்ட சிலர்
ஓடி வந்து பார்த்தார்
காலொடிந்த பூதன் நிலை
கண்டு வீட்டிற் சேர்த்தார்.

--செ.கதிரேசர்பிள்ளை

## மாடு சிரித்தது
(சிறுகதை)

பல நாட்களுக்குப் பிறகு வண்டிக்கார கார்த்திகேசுவை மறுபடியும் சந்தித்தேன். ரயிலடிக்கு யாரையோ கொண்டுபோய் விட்டுவிட்டு வெறும் வண்டியோடு வீடு திரும்பிக்கொண்டிருந்தான். வழியில் என்னைக் கண்டதும் வண்டியை நிறுத்தி என்னை ஏறிக்கொள்ளச் சொன்னான். நாலரை மைல் தூரத்துக்கும் கால்~கோச்சில் போக நடந்துகொண்டிருந்த நான் இந்த வசதியைத் தப்ப விடுவேனா? ஏறிக் கொண்டேன்.

கார்த்திகேசுவின் வண்டியில் ஏறினால் என்னால் பேசாமல் இருக்க முடிவதில்லை. வண்டியில் உட்கூடாத்திலே ஒரு ஓரமாக ஒட்டியிருந்த எலக்ஷன் நோட்டீஸ் ஒன்று கண்ணில் பட்டதும் பேச்சைத் தொடங்கினேன்.

ஓகோ கௌன்சிலுக்கு ஆள்பிடி வேலை வெகு மும்முரமாக நடக்கிறது போலிருக்கிறதே! நீ யார் பக்கம் அண்ணே? என்று இரண்டு மூன்று கேள்விகளோடு பேச்சை ஆரம்பித்து வைத்தேன். மடியிலிருந்த புகையிலையில் ஒரு துண்டைக் கிள்ளி உருட்டி வாய்க்குள் குதப்பிக்கொண்டு ஓர் அலட்சியமான சிரிப்போடு பக்கமாவது பரிசாவது தம்பி. எங்களுக்கு இதைப்பற்றியெல்லாம் என்ன தெரியும்? பரியாரியார் என்ன சொல்லுகிறாரோ அந்தப்படி செய்கிறத தான் இந்த நோட்டீஸைக் கொண்டு போய் ஒட்டச் சொல்லித் தந்தார். அவர் எனது நெற்றியிலே ஒட்டச்சொன்னாலும் ஒட்டிக்கொள்ளுவேன். புண்ணியவான் கனகாலம் இருக்கவேண்டும்!. என்று இரண்டு கையையும் எடுத்து மேலே பார்த்துக் கும்பிட்டான்.

அவர் பராக்காயிருப்பது அவனுடைய மாடுகளுக்கு எப்படியோ தெரிந்து விட்டது. அவை சற்றே உல்லாச நடைபோடத்தொடங்கின. கார்த்தகேசு எனக்குப் பதில் சொல்லிவிட்டு முன்னே குனிந்து அவைகளுக்கு சத்தம் மறுபடியும் முறுக்கி விட்டான் வண்டி கடகடத்துக்கொண்டு சென்றது.

யார் அது கந்தையாப் பரியாரியார்தானே? உனக்கும் அவருக்கும் அதிகம் கடமை உண்டு போலே என்று மெல்லக் கிளறினேன். கடமையாவது கடமை. தம்பி நீங்கள் எல்லாரும் சின்னப்பிள்ளைகள். உங்களுக்கு அந்த மனுஷரைத் தெரியாது. பூலோகத்திலே பரியாரிரைப்போல ஒருத்தர் இரண்டுபேர் இருக்கிறபடியால் தான் மழை பெய்கிறது என்று நினைத்துக்கொள். கார்த்திகேசு இன்றைக்கு உயிரோடிருக்கிறது அந்தப் பிரபுவாலேதான். இல்லாவிட்டால் இவ்வளவுக்குச் செத்த இடத்தில் புல்லுக்கூட முளைத்துப்போய் இருக்கும்.

ஓகோ அப்படியோ? அவ்வளவு பெரிய காரியமா அதென்ன? எனக்கு ஒன்றுமில்லை, தம்பி என்னோட பெண்சாதிக்கு வந்த வருத்தத்தைப் போல உலகத்திலே யாருக்கும் வந்து நான் பார்க்கவில்லை. வைத்தியர்மார் எல்லேருமே கைவிட்டுவிட்டார்கள். மானிப்பாயிலே கூட வீட்டுக்குக் கொண்டு போகச்சொல்லி விட்டார்கள். வீட்டிலே ஏழு நாளாய் அடுப்பு மூட்டவில்லை. பிள்ளை குட்டிகள் எல்லாம் ஏங்கிப்போய்க் கிடந்தன. வீட்டுக்கு லட்சுமி போல இருந்தவள் அவளுக்கு இப்படி ஒன்று என்றால் எனக்குப் பாதிப் பிராணனே போய்விட்டது போலிருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப்போயிருந்த சமயத்தில்தான் இந்தப் புண்ணியவாளன் வந்து சேர்ந்தார் அப்பா. ஒரு நாளை மருந்து. ஒரே ஒரு நாளை மருந்து தம்பி. ஒரு கிழமை அறிவு நினைவில்லாமல் கிடந்த என் பெண்சாதி அந்த மூன்று நேர மருந்துக்குப் பிறகு கண்முழித்துப் பார்த்த என்னைக் கூப்பிட்டாள். தம்பி! ஆகா! அதை மறக்க முடியாது. தெய்வம்தான் வந்து விட்டது போலிருந்தது எனக்கு. இந்த ஆனந்ததில் மற்ற நாள் பரியாரியார் வந்த வீட்டுக்கு போது அவரை விழுந்து கும்பிட்டேன். தம்பி என்ன இருந்தாலும் அந்தக் காலத்துப் பரியாரிமார்கள் தெய்வப்பிறவிகள் தான். செத்துப்போனாலும் கூடு அவர்கள் பூங்காவனத்தில் தான் இருப்பார்கள்.

அவனது நா தழதழத்தது. கண்கள் கலங்கின. பழமை உணர்ச்சியில் ஆழ்ந்து போய்விட்டான். பாவம்! எனக்கு அவனைப் பார்க்க ஒரு பக்கம் வருத்தமாயுமிருந்தது. அவனைப் பார்க்காமல் முகத்தை திருப்பிக்கொண்டாலோ சிரிப்புப் பொங்கிக்கொண்டு வந்தது.

கொஞ்சத்தூரம் வண்டி போன பிற்பாடு பேச்சைச் சாவகாசமாகத் தொடங்கினேன். இப்போ இந்தக் கௌன்சில் அடிபிடியிலே நீ

பேரம்பலம் பக்கமுமில்லை. பெரியண்ணர் பக்கமுமில்லை. பரியாரியாரின் பக்கம் என்று சொல்லு. என்று தூண்டினேன். ஏன் பரியாரியார் பெரியணணர் பக்கம் தானே வேலை செய்கிறார்.! தெரியாதோ? என்று திருப்பிக் கேட்டான் அவன். அந்த நோட்டீஸைப் படித்துப் பார்த்தால் அவர் யார் பக்கமென்று தெரியும் என்றேன்.

அதை நான் படித்துப் பார்கவில்லை. தம்பி எனக்குத் தெரியும் எப்படியும் பரியார் பெரியண்ணர் பக்கம் தான் வேலை செய்வார் என்று? அதெப்படி,? என்று வெகு ஆவலோடு கேட்டேன்.

நீ என்ன தம்பி எடுத்ததுக்கெல்லாம் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறாய்? உலகத்தலே நடக்கிறது ஒன்றுமே உனக்குத் தெரியாது போலிருக்கு. கொஞ்ச நாளைக்கு முந்தி நடைபெற்ற அந்த வேலைக்காரப பெண் வழக்கில் பெரியண்ணர் அப்புக்காத்து அவ்வளவு பாடுபட்டு சட்டவித்தை பேசி வெல்லாவிட்டால் பரியாரியார் செய்த வேலைக்கு அவர் கழுத்தில் கயிறு அல்லவா மாட்டியிருப்பார்கள் கோட்டில? ஓகோ அதற்காகவா? அப்படியானால் அவர் நிற்பது சரிதான். பெரியண்ணர் செய்த உதவிக்கு இதுவும் செய்யலாம் இன்னமும் செய்யலாம். என்று அவனேடு சேர்ந்து பாடிவிட்டேன்.

இப்படி நான் சொன்னபோது என்னுடைய முகத்தில் எதைக் கண்டு கொண்டானோ தெரியாது தன்னுடைய பிரசாரத்தை என்னிடமுங் கொஞ்சம் காட்டத் தொடங்கிவிட்டான்!

ஏன் தம்பி பெரியண்ணர் மகா கெட்டிக்காரரும் நல்லவரும் என்று சொல்லுகிறார்களே. நீ அறியவில்லையா யுத்தகாலத்திலே ஏழை மக்களுக்கு அநேகம் உதவிகள் செய்திருக்கிறாராம். தீனி இல்லாமல் சாகக்கிடந்த மாடுகளுக்கு சீமையிலேயிருந்து பருத்திக்கொட்டையும் பிண்ணாக்கும் எடுப்பித்துக்கொடுத்தாராம். நாங்கள் அவருக்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறோம். பரியாரியாருடைய மகனுக்கு கொழும்பில் வேலையாக்கி விட்டது யார் என்று நினைக்கிறீர்? என்னுடைய பெடியனையும் நெடுகப் படிப்பிக்கச் சொல்லியிருக்கிறார் பரியாரியார். என்றும் மேலும் பேச்சை இழுத்தான்.

அடே உனக்கும் இதெல்லாம் தெரிந்து விட்டது போலிருக்கே எங்கே அந்த நோட்டீஸை எடு பார்ப்போம் என்று அதைக் கேட்டு வங்கிப் பார்த்தேன் எனக்குப் பெரும் வியப்பாயிருந்தது.

அது பெரியண்ணருக்கு மாறாக அவரது எதிர்க்கட்சியினர் அவர் மீது வசைபுராணம் படி வெளியிட்ட நோட்டீஸ்! என்ன அப்பா இது? யார் பக்கத்து நோட்டீஸ் நீ கொண்டு திரிகிறாய்.? என்று கேட்டதும் கார்த்திகேசு திடுக்கிட்டு விட்டான். நான் விஷயத்தைச் சொன்னேன். அடடா மாறிவிட்டேன் போலிருக்கிறது. வண்டியில் இதை யாரோ கொண்டு வந்து விட்டுவிட்டுப் போய்யிருக்கிறார்கள். அதைக் கிழித்தெறிந்து விடு தம்பி! என்று பரபரப்பாக என்னிடம் வாங்கி தூள்தூளாகக் கிழித்தெறிந்தான். கார்த்தி அண்ணே! நீ பள்ளிக்கூடம் போனதில்லையா சிறுவயசில்? என்று அவனை நான் கேட்கவில்லை. மாட்டின் சலங்கைகள் கலகலத்தன. அது மாடு சிரித்தது போலிருந்தது எனக்கு! ஏன் சிரித்தது?

## திரு. ரீ.பி.பத்மநாதன்

திரு.ச.வினாயகரத்தினம்

மானிப்பாய் கட்டுடையில் பிறந்தாலும் தனது தொழிலையும் வாழ்வையும் தெல்லிப்பழையுடன் பிணைத்தவர் திரு. ரீ.பி. பத்தமநாதன் அவர்கள். இவர் தமது ஆரம்பக்கல்வியைக் கட்டுடையில் உள்ள பாடசாலையிலும் பின்னர் தமது உயர்கல்வியைச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரியிலும் பெற்றார். படிக்கும் காலத்தில் உதைபந்தாட்டம், கிரிக்கட் ஆகிய விளையாட்டுக்களிற் சிறந்து விளங்கினார்

கல்லூரிப் படிப்பை முடித்து இந்தியாவில் லக்னோ கிறிஸ்தவக் கல்லூரியில் உதைபந்தாட்ட வீரராக கல்விப் பயிற்சி முடியும் வரை சிறந்து விளங்கினார். அக்கோஷ்டியின் தலைவராகவும் ஓர் ஆண்டு பணி புரிந்தார். அதன் பின்னர் தனது பழைய கல்லூரியான ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நூலகராகவும், பயிற்சியாளராகவும் பதவியேற்றுக் கொண்டார். இவரின் பயிற்சியின் திறனால் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முதலாம் அணி 1958, 1959 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் சங்கம் நடாத்திய சுற்றுப்போட்டியில் வெற்றிக்கோஷ்டியாகத் திகழ்ந்தது. 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டுவரை யாழ்பாண உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்த இவர் 1958, 1962 ஆகிய ஆண்டுகளில் அவ்வணியின் தலைவரகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். கால்சுகவீனம் காரணமாக சிலகாலம் ஒதுங்கியிருந்த போதும் மீண்டும் 1968 ஆம் ஆண்டு யாழ்பாண மாவட்டத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்தார். இவர்விளையாடிய காலத்தில் யாழ்ப்பாணத் தெரிவுக்குழு பல வெற்றிகளைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பந்தைக் காதலித்து அல்லம பகலும் அதே சிந்தனையாக விளங்கிய ரீ.பி மானிப்பாயைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை உருக்குமணி தம்பதிகளின் ஏகபுத்திரியாகவும், குகெந்திரன், கமலேந்திரன், ஞானேந்திரன், கருணேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியாகவும் விளங்கிய ஜெயமணிதேவியைக் காதலித்து 1963 ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். அவர்களது இனிய இலவாழ்க்கையில் முறையே முரளி, பிறேமிலா, பிறேம்ஆனந்த் பத்மஜெயந்த் ஆகிய நால்வரைப்பெற்றுச் சிறப்புடன் வாழ்க்கை நடாத்தினார்

மகாஜனாக் கல்லூரியின் சிற்பி எனப்போற்றப்படும் தெ.து.ஜயரத்தனம் அவர்கள் 1960 ஆம் ஆண்டு ரீ.பி யைத் தமது கல்லூரியின் நூலகராகவும், விளையாட்டுத்துறைப் பயிற்சியாளராகவும் நியமனம் செய்து கொண்டார். 1960 ஆம் ஆண்டு மகாஜனாவின் முதலாம் அணி போட்டிகளிலே தோல்வியுறாத அணியாக விளங்கியது. 1964 ஆம் ஆண்டு தொடக்கம் 1970 ஆம ஆண்டு வரை மகாஜனவின் மூன்று உதைபந்தாட்ட அணிகளும் 16 தடவைகள் இறுதிப்போடடிகளில் பங்கு பெறும் வாய்ப்பும் அவற்றில் 13 தடவைகள் சாம்பியன்களாக்கிய இவரின் திறமையான பயிற்சினால் கிடைத் பலன்கள். இலங்கையில் வேறு எந்தப் பாடசாலையும் நிலைநாட்ட முடியாத சாதனையை (தொடர்ந்து எட்டு வருடங்கள் முதலாம அணியின் சாம்பியன் விருதைப் பெற்றனர்) மகாஜன பெறுவதற்குரிய நிலையை ஆக்கிய பெருமை ரீ.பி. அவர்களையே சாரும். இரண்டு தடவை 1970 ஆம் ஆண்டும் 1978 ஆம் ஆண்டும் முறையே சேர். ஜோன்ராபற் வெற்றிக் கேடயத்தையும், சிங்கர் கேடயத்தையும் பெற்று கல்லூரி உதைபந்தாட்டத்தின் உச்சநிலையை அடையச்செய்யத பெருமையும் இவரையே சாரும். நா. வடிவேஸ்வரன் அகில இலங்கைத் தெரிவுக் கோஷ்டியிலும் இடம்பெற்றுக் கல்லூரி பெருமையடையும் நிலையை உருவாக்கியவரும் இவரே.

ரீபி தானெடுத்த கருமத்தை முடிக்கும் வரை ஊன் உறக்கமின்றி எந்நேரமும் அதே சிந்தனையோடு அக்கருமத்தில் வெற்றி காண்பதில் வல்லவராக விளங்கினார். கல்லூரியின் ஹொக்கி விளையாட்டை ஆரம்பித்து அடுத்த ஆண்டிலே அந்த அணி யாழ்ப்பாண மாவட்ட சபையினாலும் தகுதியைப் பெற வைத்ததோடு ஹொக்கி அணியைச் சேர்ந்த எம் வாமதேவராஜா அகில இலங்கைப் பாடசாலைகளின் தெரிவுக்கோஷ்டியின் தலைவனாகும் பேற்றையும் பி. மகேந்திரராசா அகில இலங்கைப் பாடசாலைகளின் அணியில் அங்கம் வகிக்கும் நிலையையும் உருவாக்கித் தந்தவர்இவரே.

இவர் கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக்கழகத்தை ஆரம்பித்து திறம்பட நடாத்தி வந்தார். இக்கழகம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உதைபந்தாட்டம், கிறிக்கெட், ஹொக்கி, மெய்வல்லுநர், வலைப்பந்தாட்டம் ஆகிய துறைகளில் பெரும் சாதனைகளை நிலைநாட்டி

வருகின்றதை யாவரும் அறிவர். இத்தனை சாதனைகளை நிலைநாட்டிய போதிலும் எளிய தோற்றத்துடன் இவர் காட்சியளிப்பார். அணிகள் வெற்றி பெற்றதும் தன்னடக்கத்துடன் அவ்விடத்தை விட்டு மாயமயாய் மறைந்துவிடுவார்.

1983 ஆம் ஆண்டு யாழ்பாபணம் பல்கலைக்கழகத்திலும் உதைபந்தாட்டப பயிற்சியாளராக நியமனம் பெற்ற இவர் அவ்வணியினர் இரு தடவை அகில இலங்கை விருதைப்பெற வித்திட்டார். இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி அணியினரைப் பயிற்றுவித்து அவர்கள் யாழ்ப்பாண மாவட்ட சாம்பியனாகும் பேற்றை அடையச் செய்தார். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளராக இருந்து அந்த அணியினரை வெற்றியீட்ட வைத்தார். அதே போன்று மாதகல் இளைஞர் அணியைப் பயிற்றிப் பரிசுகள் பெறவைத்தார்

பல சாதனைகளைக் கண்ட வீரனாகத் திகழ்ந்த இவர் தற்பெருமையோ கர்வமோ இல்லாதவர். குழந்தையுள்ளம் படைத்தவர். குழந்தைகளுடன் தாமும் இணைந்து விளையாடுவர். தமது வீரர்களின் உணவு, உடை, உடற் சுத்தம் என்பவற்றில் மிகுந்த அக்கறையுடையவர். வீரர்களுக்கு தாமே சிகிச்சை அளிப்பார். மருந்து வகைகளைத் தேடிப்பெற்று அவர்களுக்குக் கொடுத்து குணமடைய வைத்து விளையாட்டையே நேசித்து வாழந்தவர். இவர் கால்நடைகளை வளர்ப்பதிலும் தீரர். அவைகளுக்கு நோய் ஏற்பட்டால் தாமே இனங்கண்டு உடனுக்குடன் தீர்த்து வைப்பார்.

தமது தலைவரை இறுதி நிலையிலும் காணமுடியாத துர்ப்பக்கியம் இவரது குடும்பத்தாருக்கு ஏற்பட்டது. அந்நிலையில் அவர்களை எங்ஙனம் தேற்ற முடியும். தமது கணவரை உயிரற்ற நிலையிலும் காணக்கொடுக்காத மனைவி படும் துயரவேதனையை எங்ஙனம் எடுத்தியம்பமுடியும். அழுது அழுது கண்ணீர் வடித்துச் சோகமயமாகவே காட்சி தருகின்றார். அவரது துயரைப் போக்க வல்லவர் யார்? பிறப்பது இறப்பது இயற்கைே எனினும் எங்ஙனம் ஆறதல்அடைவர்? சதா அழுதழுது உருக்குலைந்த நிலையிலயே காணப்படுகின்றார்.

யாருக்கும் பாரமாக கடமையாக வாழக்கூடாதெனக் கருதிவாழும் இந்தப் பண்பாளனின் வாழ்வும் அப்படியே நிறைவடைந்தது. தனது சுகவீனத்தை வைத்திய சாலைக்கு கொண்டு சென்று காண்பித்தார். இவரின் உடல் நிலையைப் பரிசோதித்து அங்கேயே இவரை அனுமதித்துவிட்டு வீட்டிற்குத் தகவல் கொடுத்தது இவரிடம் உதைபந்து பயின்ற வீரரின் மனைவியே. தகவலறிந்து இவரைக்காண நண்பர்கள் உறவினர்கள் விரைந்தபோது இவரின் மறைவுச்செய்தியே அவர்களுக்குக் கிடைத்தது.

இவரை இழந்தகுடும்பம் படும் வேதனையைச் சகிக்க முடியத நிலையில் நாங்களும் தவிக்கின்றோம் இவர்களுடன் சேர்ந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிராத்திப்போம்

நன்றி ரீ.பி. நினைவு வெளியீடு 06-12-1992


## கடிதத்தில் கரைகிறேன்

நீ அருகில் இல்லை
தொலை தூரம் போய்விட்டாய்
கடிதங்கள் நீள
கற்பனைகள் தான் மிஞ்சும்
சிறகடிக்க முடியாது
நான்கு சுவர்கள்
கலைத்துவம் இன்றி
சிதறிக்கிடக்கும்
புத்தகங்களும்
சில்லறைப் பெருட்களும்
தத்து வெட்டியும் எறும்பும்
குடியிருககும் வாடகையறை
ஓர் மூலையில் புத்தகப் பூச்சியாய் நான்

காற்று வருதற்காய்
ஒரு சிறு ஜன்னல்
சிலவேளை அதனால்
வானம் தெரியும்
கண்சிமிட்டும் நட்சத்திரங்களும்
கேலி செய்வதாய்....


காற்றசைத்து
முகிலோட
வெண்ணிலா
நிலவெறிக்க
கடலருகில் நாமருந்து
ஊடலுறும் காலமிது

என்செய்வேன்
என்னுயிரே
தூங்காத விழிகளுடன்
மூலை அறையில்
வாழ்வு விரிகிறது.


தங்கத்தின் உணர்வுகளில்
மங்காத் பெயர்
Tharani Jewellery
எது இருக்கும் என்ற
சிந்தனைக்கே இடமில்லை...
இல்லையென்பதில்லை.....!
54 Ealing Road
Wembley
Middlesex HA0 4TQ
www.tharanijewellery.com
THARANI JEWELLERY
தாரணி நகைக்கூடம்
020 8902 6777


11 வருடங்கள் வெற்றிகரமான பாதையில் ......
சுபமுகூர்த்தம்
என்றால்.....
SILK
EMPORIUM
122 Upper Tooting Rd,
London SW17 7EN
Tel:020 8672 1900
WESTERN
Jewellers
230 Upper Tooting Rd,
Tooting,
London SW17 7EW
T : 020 8767 3445
5 Plaza Parade,
33 Ealing Rd, Wembley,
Middlesex HA0 4YA
T : 020 8903 0909


PATHMINI JEWELLERS
22ct Gold Jewellery
Precious Stones &
Diamond Merchants
அதிர்ஷ்ட நவரத்தினக்கள் பதித்த மோதிரம்
மற்றும் நகைகளுக்கும் தரம், நவீனம், மலிவு
நம்பிக்கைக்கு நாடவேண்டிய இடம்
இலண்டன் மாநகரில் வைரத்தாலிக்கொடி,
பொன்னுருக்கல் போன்றவற்றிர்க்கு
உங்கள் மனதில் என்றும் நீடித்து நிலைத்திருக்க
பேண்டிய ஒரே ஸ்தாபனம்
Tel: 020 8665 1111
Fax: 020 8664 8999
www.pathminijewellers.com
892 London Road,
Thornton Heath
Surrey CR7 7PB


Finest Quality 22ct Gold
Diamond Jewellery & Textiles
Anthoorium
World of Designs
பிரம்மிப்பூட்டும் பிரம்மாண்டமான காட்சியறையில் நீங்கள் விரும்பிய
டிசைன்களில் ஆடவர் மங்கையர்களுக்கு
For your Jewels Gems, Sarees, Costumes,Musical Instruments & Gift Items.
Please visit us
102 B Burlington Road, New Malden, Surrey KT3 4NT
Tel: 020 8942 8001 / Fax: 020 8942 8007
W: www.anthoorium.co.uk E: sales@anthoorium.co.uk

SKC
ESTD.
1992

# SRI KANTH & CO.

Solicitors & Property Business Centre

**SOLICITORS & ESTATE AGENTS**

**PROPERTY SALES, LETTING & CONVEYANCING**

*UNDER ONE ROOF*

We also practice in the following areas of LAW:

- Immigration
- Wills & Probatc
- Conveyancing-Residential
- Conveyancing-Commercial
- Landlord & Tenants
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matter
- Welfare Matter

**Tel: 020-8795 0648**

557 High Road, Wembley, Middlesex HA0 2DW
Fax: 020-8795 0649 Mobile: 07831 195979

## Thamil Isai Vizha event is sponsored by Annam


When you are at the Beck Theatre, just take a saunter down the garden, close your eyes, inhale deeply, and breathe in the air. The magical milieu is almost tangible, and you won't be able to resist the intoxicating aroma of all things spicy, enticing Annam at Uxbridge Road (a mere 20 yards from you). There it is. Is it just a brasserie? Perhaps. Is it a bistro? Could be. Whatever it is, there's one thing for sure. This bijou eatery is definately not just another Sri Lankan restaurant. It is a Sri Lankan restaurant with a difference. Dine in experience...

- *Masala Dosa, Onion Dosa, Chettinadu Dosa, Uthappam, Idly, Uppuma, Thali...*
- *Kothu Roti, Veechu Roti, Paratha, Briyani, Fried Rice, Lumprice...*
- *Flame Grilled Chicken, Lobster Grill, King Prawn a la Annam, "Flamin'" Crab...and many more*
- *Drop in for a complementary coffee*
- *Free delivery on orders over £12.00*
- *We cater for weddings and parties, small or large, at discounted prices.*

**Bring this advertisment and get a 20% discount on meal menu**

Nm Annam



**1000 Uxbridge Road • Hayes • Middlesex UB4 0RL** (near Beck Theatre)

**Tel: 020 8561 8316 Mob: 07956 511015 E-mail: annamjk@yahoo.co.uk**

Megaa Superstore
99 Burlington Road New Malden Surrey KT3 4LR
Phone - 020 8336 0061
7 days a week, Open from 6:00 am to 10:30 pm

உங்களுக்குத் தேவையான அனைத்து மளிகை
பொருட்களை மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஓரே இடம்.

மோர்மிளகாய், செத்தல் மிளகாய், பப்படம், புளி, தேங்காய் பால், மீன்,
அரிசி, அரிசி மா, மிளகாய் தூள் ....
இன்னும் இது போல் பல பொருட்கள்
மலிவ விலையில் விற்பனைக்கண்டு

## மிடுக்கோடு நிலைக்கின்ற மகாஜன மாதா!

மகாஜனன் பாவை ஜெயபாலன்

ஆள்அவரம் இல்லாத தெல்லியூர் மையம்
அம்பனை அமைவாக அன்னையவள் இன்னும்
நாளாந்தம் மாணவர் நாற்றிசையால் கூடி
நாடுகிறார் திறன்மாறா கல்விச்சுமை நாடி

எண்ணற்ற கண்ணிவெடி விதைத்த வயற் காணி
இடிபாடு பற்றைபுற்று சுற்றுமுற்றும் பேணி
கொண்டிருந்தும் மாணாக்கர் ஆயிரமாம் இன்னும்
கொள்ளுகின்றார் 'A' தரத்து ஸ்ரார்சித்தி இன்னும்

துரைப்பர் தொடங்க மகன் ஜெயரத்தின மகிபன்
தொடர்ந்து அவள் சீர் அழகுக்கு உழைத்ததனர்
அதிபன்
நிரையான வயவோரக் கிராமத்தார் அன்பு
நின்று வான் உயரும் அவள் தோற்றமுது கெலும்பு.

அன்னையவள் அறிவூற்றில் அருந்தி நீராடி
அகிலமெல்லாம் நிறைந்துள்ள செல்வர்களோ கோடி
அன்னைபெயர்ச் சங்கங்கள் அமைந்து நின்று கூடி
ஆர்வமுடன் அவள் உயர்வுக்கு உழைக்கின்றார்நாடி

ஷெல்பொம்பர் சேதாரம் கட்டிடங்கள மீதும்
திசையெங்கும் கிளைமோரின் மனப்பயத்தி னூடும்
கல்விநல்கும் ஆசிரியச் செம்மல்களை நாங்கள்
கைகூப்பி தொழுதாலும் கடன்தீரா போங்கள்.

கலையோடு விளையாட்டு துறைமீதும் ஆர்வம்
கலையாத திறனோடு வெற்றிபுகழ் பெயரும்
நிலையான திறனாளி மகாஜனஎம் மாதா
நிறைவாகும் நூற்றாண்டில் அமைதி மீளாதா?

## மகாஜனா மாலை 2006 நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 5.00 . 6.00 | **நாதஸ்வர தவில் கச்சேரி**<br>ஈழத்து கலைஞர் மகாஜனன்கள்<br>கேதீஸ்வரன், ஞானசம்பந்தர் (நாதஸ்வரம்)<br>தட்சணாமூர்த்தி உதயசங்கர், சிவமூர்த்தி (தவில்) |
| 6.00 . 6.10 | **கிராமிய நடனம்**<br>சுவாதி நீதவான், பவித்திரா பிரேம்பாபு |
| 6.10 . 6.20 | **நடனம்**<br>காஜத்திரி சூரியகுமார், கீதா சூரியகுமார் |
| 6.20 . 6.40 | மங்கள விளக்கேற்றல்<br>கல்லூரி கீதம்<br>வரவேற்புரை விமலதாசன் (தலைவர்)<br>கௌரவ விருந்தினர் உரை<br>***Dr. T*** உமைபாலன் |
| 6.40 . 6.50 | **நடனம்**<br>சுவாதி நீதவான், பவித்திரா பிரேம்பாபு,<br>சிந்துயா யோகச்சந்திரபோஸ், சித்துரூபி சுகுமார் |
| 6.50 . 7.05 | **சோக்கிரட்டீஸ்** (நாடகம்)<br>மகாஜனன் மா.தியாகீஸ்வரன் |
| 7.05 . 7.15 | **நடனம்**<br>வீணா சிவநேசன் |
| 7.15 . 7.25 | **சர்ச்சை** (நாடகம்)<br>க.பாலேந்திரா (நெறியாள்கை),<br>பா.சத்தியேந்திரன், சி.கணேசலிங்கம்,<br>ச.வாசுதேவன், க.ஆனந்தநடேசன்<br>சந்தோஸ் ஆனந்தன், பிரசாந் முருகதாஸ் |
| 7.25 . 7.40 | **நடனம்**<br>சிந்துஜா பராபரன் |
| 7.40 . 8.15 | மகாஜனன்கள் வழங்கும்<br>மாவை நித்தியானந்தனின்<br>**ஐயா எலக்சன் கேட்கிறார்** (நாடகம்)<br>அ.இரவி (நெறியாள்கை),<br>சி.கணேசலிங்கம், அ.இரவி, விக்கினேஸ்வரன்,<br>ப.வை.ஜெயபாலன், அ.சிவதாஸ் |
| 8.15 . 8.30 | **இடைவேளை** |

8.30 . 8.40 **நடனம்**
காஜத்திரி சூரியகுமார், கீதா சூரியகுமார் ஜனனி ராஜா
8.40 . 915 **பிரத்தியேகக் காட்சி** (நாடகம்)
க.பாலேந்திரா (நெறியாள்கை),
ஆனந்தராணி பாலேந்திரா,
மனோ மனுவேற்பிள்ளை,
பா.சத்தியேந்திரன்

9.15 . 9.20 நன்றியுரை
ப.வை.ஜெயபாலன்
9.20 . 9.40 கலைஞர் கௌரவிப்பு
9.40 . 11.00 **கானசாகரம்**
ஈழத்து இன்னிசை நிகழ்ச்சி
(அவைக்காற்று கலைக்கழகம்)
ஏ.மு.தேவலிங்கம், மா.சத்தியமூர்த்தி,
மஞ்சுளா சத்தியேந்திரன், சௌமியா ஆனந்தநடேசன், ஆனந்தராணி பாலேந்திரா, தர்சினி சிவசுதன், விஜயகுமாரி பரமகுமரன், ரவிசங்கர், ஆனந்தநடேசன், சத்தியேந்திரன், உதயன், கஜன்

| | |
|---|---|
| மேடை நிர்வாகம் | சண்முகராஜா |
| உதவி | சிவக்குமார், பாலகுமார், குமரன், சிவயோகி |
| ஒலியமைப்பு | சிவசுதன், கணேந்திரன் |
| ஒளி | ரமேஸ், இளங்கோ |
| ஒப்பனை | சசிகலா வாசுதேவன் |
| நிகழ்ச்சித்தொகுப்பு | ஜெயபிரபா பரா, ஆனந்தராணி பாலேந்திரா |
| மேடையின் பின் | தயாளன், பாலகுலேந்திரன், சம்பந்தன், சிவானந்தராஜா, பைரவி சிவக்குமார், கமலா ஜெயபாலன், அபிராமி விமலதாசன், ரதி புவனேந்திரா, சேயோன், குகனேசன், சபேசன், குலராஜன் |
| நிழல்படம் | புவனேந்திரா |
| ***Video*** | தீபம் தொலைக்காட்சி |
| விழா அமைப்பு | சி.கணேசலிங்கம் |

**நிகழ்ச்சித் தயாரிப்பு கலாசாரப் பிரிவு பழைய மாணவர் சங்கம் ஐக்கிய இராச்சியம்**

# PRINTERS

கண்கவரும் வண்ணங்களில் விதம்விதமான அழைப்பிதழ்கள் பலகாரப் பெட்டிகள் அரங்கேற்ற மலர்கள் நினைவு மலர்கள் நீங்கள் வியக்கும் வண்ணம் அலங்காரஅச்சுப் பதிப்பு செய்திட வாருங்கள் உங்கள் எண்ணம்போல் எடுத்துச் செல்லுங்கள்




- Graphic Design
- Wedding Cards
- Business Cards
- Invitation Cards
- Rubber Stamp
- Foil Printing
- Letterheads
- Invoices
- Brochures
- Plastic Bags
- Cake Boxes
- Baloon Printing

RS Printers Ltd
34 Court Parade
East Lane, Wembley
Middlesex, HA0 3HS

Tel: 020 8904 6326
Fax: 020 8904 4524
Mobile: 077 6522 4337
www.rsprinters.com
rsprintersltd@aol.com
info@rsprinters.com

# நன்றி

## இந்த மலரில்

- எம்மோடு இணைந்து நின்ற விளம்பரதாரர்கள்
- எமக்கு உதவிய பத்திரிகைகள், மறறும் தொடர்பு சாதனங்கள்
- ஆக்கம் தந்தோர்கள்
- குறித்த நேரத்ததில் அச்சிட்டு உதவியஇ திரு ரமணன், *R S* பிரிண்டேஸ்
- புத்தக வடிவமைப்பு செய்து உதவியோருக்கும்
- தமிழ் தட்டச்சில் உதவிய க.ஜெகதீஸ்வரன், வை.சுப்பிரமணிய குருக்கள், திரு சி சத்தியேந்திரா

ஆகியோருடன்

## இம்மாலையில்

- பங்கேயற்ற பிரதம விருந்தினர், கௌரவ விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள்.
- நிகழ்ச்சிகளைத் தந்துதவி அவைக்காற்று கழகத்தினர், துரை மாஸ்ரர, ஈழத்திலிருந்து வருகை தந்திருந்த விற்பன்னன்களுக்கும்
- சுவை உணவு தந்த தாய் சமுத்திரவிற்கும்
- புகைபட உதவி திரு புவனேந்திரன் அவர்களுக்கும்
- ஒளி, ஒலிக்கு உதவிய திரு இளங்கோ அவர்களுக்கும்
- ஒப்பனை, மேடை நிர்வாகம், பின்னனியில் உதவியோர்களுக்கும்
- அறிவிப்பாளர்களுக்கும்
- *Secoombe* அரங்க அமைப்பாளர்களுக்கும்


இவர்களோடு

## எம்முடன்

- எல்லா வழிகளிலும் எமக்குதவிய சகல மகாஜனன்களுக்கும்
- இந்த சங்கத்தை இனிமேல் எடுத்து செல்லத் தயாராக இருக்கும் இளம் மகாஜனன்களுக்கும்
- எம்மோடு இன்று இந்த இனிய மாலைப்பொழுதை களித்த உங்களுக்கும்


## எமது உள்ளங்கனிந்த நன்றிகள்.

### மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ~ ஐக்கிய இராச்சியம்



## மாண்புறும் மகனாம் மகாஜனா சிப்பி
## ஜயரத் தினம் பணி நினைவோம்

### திரு தெ து ஜெயரத்தினம்



புன்னகை செய் முகமும் புனிதம் நிறை மணமும்
மன்னு சைவப் பணியும் வாழ்வினிற் கொண்டிருந்தாய்
கல்லூரித் தாய் மகிழ்ந்த காலமெல்லாம் உழைத்தாய்
உன்னை வணங்குகின்றோம் உளமார்ந்த நன்றி செய்வோம்.

புலவர் ம பார்பதிநாதசிவம்.

# மகாஜனன்
# Mahajanan

2006




வெல்லுக மகாஜன மாதா!

*www.mahajana.co.uk* *email – info@mahajana.co.uk*